பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 05 ஞாயிற்றுக்கிழமை 18.04.2021 கதிர் 164

**இனி இது ரகசியம் அல்ல!**

தென்னிலங்கை அரசியலில் இரண்டு விடயங்கள் சூடு பிடித்துள்ளன. இரண்டுமே ஆளும் தரப்புக்குள் நடைபெறும் குத்து வெட்டுகள், கால் வாரல்கள் பற்றிய விடயம்தான்.

ஒன்று – முன்னாள் நீதியமைச்சர் விஜேதாஸ பக்கம்02 »

# 78 குண்டுகள் முழங்க பொலிஸ் மரியாதையுடன் 'சின்னக் கலைவாணர்' விவேக்கின் உடல் தகனம்

## தமிழ்த் திரையுலகத்தினர் அணிதிரண்டு கண்ணீர் அஞ்சலி



மக்களைச் சிரிப்போடு சிந்திக்கவும் வைத்தமையால் 'சின்னக் கலை வாணர்' என அழைக்கப்பட்ட தமிழ்த் திரையுலக நகைச்சுவை நடிகர் விவேக் (வயது 59) நேற்று அதிகாலை காலமானார். அவரின் பூத வுடல் 78 குண்டுகள் முழங்க பொலிஸ் மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

விவேகானந்தன் என்ற இயற்பெயர் கொண்ட விவேக், திரையுலகில் விவேகம் மிக்க நகைச்சுவையால் தனித்தன்மையோடு மிளிர்ந்தவர். துணை நடிகராக அறிமுகமாகி, சிரிக்க வைக்கும் திறனால் வளர்ந்து, ஒரே ஆண்டில் சுமார் 20 படங்களில் நடிக்கும் அளவுக்கு மிகவும் பிசியான காமெடி நடிகராக திகழ்ந்தவர். அறிமுக கதாநாயகர்கள் தொடங்கி, முன்னணி கதாநாயகர்கள் வரை விவேக்கின் நகைச்சுவை திரைப்படத்தின் வெற்றிக்கு முக்கிய பங்களிப்பு செய்த காலம் தான், திரையுலகில் அவரது உச்சம்.

நகைச்சுவை மூலம் இலஞ்சம், ஊழல், சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை, சமூக சீரழிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தியமையால், அவருக்கு 'சின்னக் கலைவாணர்' என்ற அன்புப் பட்டம் வழங்கப்பட்டது. தமிழ் சினிமாவில் இதுவரை 220 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து முத்திரை பதித்துள்ளார். அதேபோல், மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல் கலாமின் மீது கொண்ட பற்றின் காரணமாக ☞2

# கொலை அச்சுறுத்தல் விடுத்த கோட்டாவுக்கு எதிராகத் தென்னிலங்கையில் போர்க்கொடி

## ஜனாதிபதி பதவியை இராஜிநாமா செய்யுமாறும் வலியுறுத்து



நல்லாட்சி அரசில் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்வதற்கு முயற்சிகள் இடம்பெற்றபோது அது சட்டத்துக்கு முரணான செயற்பாடு எனத் தெரிவித்து அவரை சிறைவாசத்திலிருந்து பாதுகாத்தவர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ ஆவார். அவ்வாறான நபருக்கு கொலை அச்சுறுத்தல் விடப்படுவது பொருத்தமற்றது. இவ்வாறான பொருத்தமற்ற நடத்தைகளை ஜனாதிபதி மாற்றிக்கொள்ள வேண்டும். செய்யும் தொழில் பற்றி அறியாவிட்டால் மறைந்த ராஜபக்ஷக்களின் கௌரவத்துக்கு இழுக்கை ஏற்படுத்தாமல், தயவு செய்து பதவியை ஒப்படைத்துவிட்டுச் செல்லுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார். ☞2

# புலிகளை மீளுருவாக்க முயற்சியாம்; வடக்கில் ஐவரை கைதுசெய்த ரி.ஐ.டி.

## கொழும்பில் தடுத்துவைத்து விசாரிக்க முடிவு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை மீளுருவாக்கும் நோக்குடன் குழுக்களை அமைத்துச் செயற்பட்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு பேர், புதுக்குடியிருப்பில் ஒருவர் என ஐவர் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளவாலை பொலிஸ் பிரிவில் இருவரும், கோப்பாய், பலாலி மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுகளில் தலா ஒருவரும் என ஐவர் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஐவரும்மேலதிகவிசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இந்தியாவில் ஆயுதங்களுடன் ☞2

# யாழில் 10 பேர் உட்பட வடக்கில் மேலும் 12 பேருக்கு கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் மேலும் 12 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். போதனா வைத்திய சாலை மற்றும் யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் 404 பேரின் மாதிரிகள் ☞2

# மேலும் இருவர் சாவு; கொரோனா காவு 617

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த 73 வயதான பெண் ஒருவரும், குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதான ஆண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.


இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றால் ☞2

# வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு மீண்டும் பயணக் கட்டுப்பாடு விதிப்பது பற்றி ஆராய்வு

## தொற்றுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் தலைவர் தெரிவிப்பு

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தருபவர்களுக்கு பயணக் கட்டுப்பாடுகள் விதிப்பது தொடர்பில் தாம் கவனம் செலுத்தி வருகின்றார் எனத் தொற்றுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்து வருகை தருபவர்களில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான அதிகம் அடையாளம் காணப்பட்டமையை அடுத்தே, இது குறித்து கவனம் ☞2


www.EQMarriageService.com
ஒன்லைன் திருமண சேவை
Tel : 076 664 9401 (Whatsapp)
✔ திருமணம் சரி வரும் போது 1 லட்சம், 2 லட்சம் போன்ற எவ்வித தரகர்கூலியும் இல்லை #NO_Broker_Commission
✔ திருமணம் சரி வரும் வரை பதிவு செயற்ப்பாட்டில் இருக்கும் #NO_Duration
✔ எல்லைகளற்ற விபரங்களும் ஜாதகங்களும் #Unlimited_Profiles_Charts
✔ புகைப்படம், தொலைபேசி எண் உங்கள் அனுமதியின்றி யாராலும் பார்க்க முடியாது #Privacy_Matters
✔ #Reg_Fees_Only
www.EQMarriageService.com, Ensured Quality Lanka (Pvt) Ltd., Colombo 04



# வவுனியாவில் இராணுவம் மீது மோதியது மரக்கடத்தல் வாகனம்

## இரு சிப்பாய்கள் படுகாயம்

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மரங்களைக் கடத்திச் சென்ற வாகனம் ஒன்று மோதியதில் இரண்டு இராணுவத்தினர் படுகாயமடைந்த நிலையில் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷ கிளப்பியிருக்கும் சர்ச்சை.

மற்றது – விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல போன்ற தீவிரப் போக்காளர்கள் கிளப்பிப் போட்டிருக்கும் வெடி.

இன்று பிறக்கும் புதுவாரத்தில் இவை இரண்டும் மேலும் சூடு பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் கொழும்புத் துறைமுக நகரை நிர்வகிப்பது தொடர்பான ஆணைக்குழு சட்ட மூலத்தில், அப்பிராந்தியத்தின் மீது சீனாவுக்கு விசேட அதிகாரங்களை அளிப்பது நாட்டின் இறைமையை மீறும் செயல், தேசத் துரோகம் என்று வண. முருந்தெட்டுவே ஆனந்த தேரரும், விஜேதாஸ ராஜபக்ஷவும் கூட்டுச் சேர்ந்து வைத்த வத்தி பற்றிப்பிடித்து விளாசி எரிகின்றது. பேரினவாதத்தைத் தேசபக்தியாக அர்த்தப்படுத்தும் புதிய புதிய தரப்புகள் எல்லாம் சாறத்தைத் தூக்கி மடித்துக் கட்டிக் கொண்டு விஜேதாஸ ராஜபக்ஷ தரப்புக்கு ஆதரவாகத் திரளத் தொடங்கியிருக்கின்றன என்று தகவல் வெளியாகியுள்ளது.

கோட்டா பக்கம் நிற்பார் என எதிர்பார்க்கப்பட்ட எல்லே குணவங்ஸதேரர் தரப்புக் கூட மெல்ல அந்தப் பக்கத்தில் இருந்து நழுவி, விஜேதாஸ ராஜபக்ஷ தரப்புக்கு ஆதரவாக மாறிவிட்டது என்று தகவல்.

இதற்கிடையில், ஜனாதிபதி கோட்டா தரப்பு, கட்சிக் கட்டுப்பாடுகளை மீறியமைக்காக விஜேதாஸ ராஜபக்ஷ மீது ஒழுக்காற்று நடவடிக்கை என்று புதிய கதை ஒன்றை ஆரம்பித்திருக்கின்றது.

'அப்படியா, நல்லது, வாங்க அந்த வழிக்கு' என்று விஜேதாஸ ராஜபக்ஷ தரப்பு வெற்றிலை வைத்துப் பார்த்திருப்பதாகத் தென்னிலங்கை செய்தி வட்டாரங்கள் கூறுகின்றன.

கோட்டா தரப்பை நீதிமன்றத்தில் சந்திப்பதற்கு விஜேதாஸ ராஜபக்ஷ ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றாராம்.

விஜேதாஸ ராஜபக்ஷ நல்ல சட்ட விற்பன்னர். இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் தலைமை வகித்தவர். அதுவும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி நிலைமை தொடர்பான வழக்குகளின் சட்ட விவகாரங்கள் அவருக்கு அத்துப்படி. தற்போதைய தேர்தல் சட்டங்களுக்கு அமைய, சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு றோஹித போகொல்லாகம அணி தாவியபோது அவரின் எம்.பி. பதவி பறிபோகாமல் காப்பாற்றிய சட்டநிபுணர் குழுவின் சிரேஷ்ட தலைவர் விஜேதாஸ ராஜபக்ஷதான்.

இப்போது தனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துத் தன்னை கட்சியிலிருந்து வெளியேற்றும் திட்டம் எதனையும் மொட்டுக் கட்சி முன்னெடுத்தால் அதையே வசமாகப் பயன்படுத்தி, மொட்டுக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட சுயாதீன மாகச் செயற்படும் சுயேச்சை எம்.பி என்று தன்னைப் பிரகடனப்படுத்தும் நீதிமன்ற உத்தரவு ஒன்றைத் தாம் நிச்சயம் பெறுவார் என்றும் –

அப்படிப் பெற்ற பின்னர் நாடாளுமன்றத்தில் இருந்தபடியே ஆளும் தரப்புக்கு கட்டுமட்டில்லாமல் குடைச்சல் கொடுக்க முடியும் என்றும் –

ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ கருதுகின்றாராம். அதனால் தமக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைக்கு அவர் வெற்றிலை வைத்துக் காத்திருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

இதனால், விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக, சட்ட நடவடிக்கைகளுக்கு வாய்ப்பான விடயங்களை ராஜபக்ஷக்களின் அரசு அவசரப்பட்டு திறக்காது என்றும் சில செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. பார்த்திருப்போம் என்ன நடக்கின்றது என்பதை.

அடுத்தது – மொட்டுக் கட்சிக் கூட்டணிக்குள் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, வாசுதேவ நாணயக்கார, சுதந்திரக் கட்சியினர் எனப் பலர் கிளப்பியிருக்கும் உள்கட்சி குத்துவெட்டு விடயம்.

இந்த விவகாரத்தைச் சமாளிப்பதற்காக மொட்டுக் கூட்டணியின் பங்காளிக் கட்சித் தலைவர்களை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாளை சந்திக்கின்றார்.

ஆனால், இப்பிரச்சினைக்குள் முழுமையாகத் தலையை நீட்டி, தரப்புக்களை அதற்கேற்ற வகையில் கையாண்டு, ஒரே நாளில் தீர்த்து வைக்கும் 'மூட்'டில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இல்லை என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் தம்மைச் சிந்திக்கவே விடாமல் பல தரப்புகளினாலும் கோட்டாபயவை நியமிக்கும்படி விடாது அழுத்தம் தந்து, தம்மைப் பொறியில் மாட்டும் நிலைக்குத் தள்ளி, இன்று ஒரு செல்லாக்காசு அதிகாரமுமற்ற இக்கட்டில் மாட்ட வைத்து விட்டு, இப்போது அதே கோட்டாபய ஆட்சிப் பீடத்துடன் கொழுவுப்பட்டுக் கொண்டு வந்து நின்று, எடுத்து விடு, சமரசம் செய் என்றெல்லாம் துடித்தால் நானா அதைச் செய்வேன் என்ற மன நிலையில் மஹிந்தர் இருக்கின்றார் என்று தெரிகின்றது.

அதனால், நாளைய கூட்டத்தில் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு வலிந்து தீர்க்கமாக எந்த முயற்சியையும் பிரதமர் எடுக்கார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

★ ★ ★

நேற்று ஒரு நிகழ்வில் ஓர் அதிசய சந்திப்பு. முன்னாள் முதல்வரும், முதல்வர் பதவியை முதல் தரம் பறிகொடுத்து விட்டு அதை இந்தத் தடவை எப்படியும் சுருட்டிக்கொள்ள வேண்டும் என்ற பகல் கனவில் துடிக்கும் பிரமுகரும் நேரில் சந்திக்க வேண்டிய நேர்ந்துவிட்டது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் மகளின் பூப்புனித நீராட்டு விழா. நிகழ்வு ஆரம்பமான போதே நேரத்துடன் முன்வரிசையில் அமர்ந்திருந்தார் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் எம்.பியுமான மாவை சேனாதிராசா. பக்கத்தில் முன்னாள் மட்டக்களப்பு எம்.பி. சீனித்தம்பி யோகேஸ்வரன்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சருமான நீதியரசர் விக்னேஸ்வரன் சற்றுப் பிந்தித்தான் வந்தார். இரண்டாவது வரிசையில் நேரே மாவை சேனாதிராசாவுக்குப் பின்னால் ஆசனம் கிடைத்தது விக்னேஸ்வரனுக்கு.

முதலமைச்சர் பதவியில் மாவை கனவு காண, அந்தப் பதவிக்கு மாவை பொருத்தமேயற்றவர் என விக்னேஸ்வரன் அறிவிக்க, பெரும் முரண்பாடு தோற்றும் நிலைமையில் இந்த நிகழ்வு.

மாவைக்குப் பின்னால் வந்து அமர்ந்த நீதியரசர் விக்னேஸ்வரன் மாவையின் முதுகில் தடவினார். மாவை திரும்பிப் பார்த்தார்.

"என்னுடைய பகிரங்கக் கருத்து வெளிப்பாட்டால் என் மீது கோபமாக இருப்பீர்கள் போலும்" – என்றார் விக்னேஸ்வரன்.

"இல்லை, இல்லை. யார் மீதும் நாங்கள் கோபிப்பதில்லை. அது எங்கள் வழக்கமும் அல்ல. ஆனால் உரிய சமயத்தில், உரிய இடத்தில், உரிய முறையில் பதிலடி தருவோம்." – என்று 'ஷொட்' கொடுத்தார் மாவை.

அந்தப் பதிலைச் சிரித்து ஏற்றுக் கொண்டார் விக்னேஸ்வரன்.

விக்னேஸ்வரனைக் கண்டதும் மாவை சேனாதிராசாவிற்குப் பக்கத்தில் இருந்த சீனித்தம்பி யோகேஸ்வரன் எழுந்து தனது ஆசனத்தில் இருக்கும்படி விக்னேஸ்வரனுக்கு இடம் கொடுத்தார். அதனையடுத்து மாவைக்குப் பக்கத்தில் அமர்ந்து சிரித்து உரையாடினார் விக்னேஸ்வரன்.

இருவர் முகத்திலும் அந்த உரையாடலின் போது புன்முறுவல் தென்பட்டது. ஆனால் அது உள்ளத்தில் இருந்து வந்த புன்முறுவலா என்பது நிச்சயம் சந்தேகத்திற்கு உரியதுதான்....!

★ ★ ★

இலங்கையில் இருந்து கடந்த மூன்று நாள்களுக்கு முன்னார் உகண்டாவுக்கு மூன்று விமானங்களில் அனுப்பப்பட்ட பொதிகளில் என்ன அடங்கியுள்ளன என்ற மர்மம் குறித்து கொழும்பு ஊடக வட்டாரங்கள் பெரும் தேடுதலில் – துப்புத் துலக்கலில் – நேற்றிரவு வரை ஈடுபட்டிருந்தமையை அறியமுடிந்தது.

மேலிடத்துக்கு மிக நெருக்கமான ஓர் ஊடகத் தரப்பின் தலைமையின் ஏற்பாட்டில் மிகப்பெறுமதியான இந்தப் பொதிகள் மூன்று விமானங்களில் அனுப்பப்பட்டன என்று கூறப்படுகின்றது.

விடயம் மலிந்தால் சந்தைக்கு வரும் தானே...!

– மின்னல் –

## யாழில் 10 பேர் உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 10 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டுள்ள நிலையில் அவர்களில் யாழ். பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவரும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நால்வரும் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்திலும் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது – என்றார்.

## மேலும் இருவர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தோரின் எண்ணிக்கை 617 ஆக அதிகரித்துள்ளது என அரச திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## புலிகளை மீளுருவாக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதுசெய்யப்பட்டவர்களுடன் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே குறித்த ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செலுத்துவதாகவும் அவர் கூறினார்.

வெளிநாட்டுப் பயணிகளைத் தனிமைப்படுத்தும் விடயம் தொடர்பான நடைமுறைகளும் இறுக்கமாகக் கடைபிடிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உலக நாடுகளில் கொரோனாத் தொற்றின் மூன்றாம், நான்காம் அலைகள் ஏற்பட்டுள்ள நிலையில், சில நாடுகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் விமானப் போக்குவரத்துகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

2021ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்தவர்களில் 1, 593 பேரும், ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் இதுவரை 500 இற்கும் அதிகமானவர்களும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையைக் கருத்தில்கொண்டு, பயணக் கட்டுப்பாடுகள் விதிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது – என்றார்.

## 78 குண்டுகள் முழங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவரது கருத்துகளை மாணவர்களிடையே கொண்டு செல்வதில் முக்கியப் பங்காற்றியவர். மேடைகள் தோறும் கலாமின் கருத்துகளைப் பேசி மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். சுற்றுச்சூழல் தொடர்பாகவும் அமைப்புகளை வைத்து மரம் நடுதல் போன்றவற்றை ஊக்குவித்தவர் விவேக். இதுவரை 33 இலட்சத்துக்கும் அதிகமான மரக்கன்றுகளை நட்டுள்ளார். அதேபோல் கிராமங்கள் தோறும் மரம் நடும் இளைஞர்களை ஊக்குவித்தும் வந்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு விவேக்கின் 13 வயது மகன் பிரசன்னா குமார் அகால மரணமடைந்தமை அவரது வாழ்வின் பெருந்துயரமாக அமைந்துவிட்டது. கடைசியாக அவர் 2020ஆம் ஆண்டில் தாராள பிரபு என்ற படத்தில் நடித்திருந்தார்.

நேற்று முன்தினம் முற்பகலில் சென்னை சாலிக்கிராமத்தில் உள்ள தமது வீட்டில் விவேக் இருந்தபோது மூச்சுத்திணறல், மயக்கம் ஏற்பட்டு, வடபழனியில் உள்ள சிம்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மிகக்கடுமையான மாரடைப்பால் விவேக் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்து சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன. இதயம், நுரையீரலின் செயற்பாடுகளை மேற்கொள்ளும் எக்மோ கருவி மூலமும் விவேக்குக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. முதல் நாள் வரை நல்ல உடல்நலத்தோடு காணப்பட்ட விவேக், திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட செய்தி, தமிழகத்துக்கே அதிர்ச்சியான செய்தியாகவே அமைந்தது.

இந்நிலையில், தமிழ்த் திரையுலக இரசிகர்களைப் பேரதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டு, நேற்று அதிகாலை 4.35 மணியளவில் நடிகர் விவேக் காலமானார்.

மருத்துவமனையிலிருந்து அவரது பூதவுடல் சாலிகிராமத்திலுள்ள அவரது இல்லத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு அவரது குடும்ப உறவினர்கள், நண்பர்கள், திரைத்துறையினர் பலர் அஞ்சலி செலுத்தினர்.

நேற்று மாலை 4 மணியளவில் நடிகர் விவேக்கின் இறுதி ஊர்வலம் சென்னை விருகம்பாக்கம் வீட்டில் இருந்து தொடங்கியது. இறுதி ஊர்வலத்தில் ஏராளமான திரையுலகப் பிரபலங்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

மேட்டுக்குப்பம் மின்மயானத்தில் 78 குண்டுகள் முழங்க பொலிஸ் மரியாதையுடன் விவேக்கின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. அவருக்கு அவரது மகள், இறுதிச்சடங்குகளைச் செய்தார்.

## கொலை அச்சுறுத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

1994 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவின் சட்ட ஆலோசகராக ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ செயற்பட்டார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க வேட்டுமனுத் தாக்கல் செய்யாமலிருந்தபோது இவரே போராடி வேட்புமனு தாக்கல் செய்ய வைத்தார்.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்ய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோது, நல்லாட்சி அரசில் நீதி அமைச்சராகச் செயற்பட்டு அதனை விஜேதாஸ ராஜபக்ஷவே தடுத்தார். 'இது சட்டத்துக்கு முரணான செயலாகும். நான் நீதி அமைச்சராக இருக்கும் வரை இதற்கு இடமளிக்கமாட்டேன்' என்று விஜேதாஸ பகிரங்கமாகக் கூறினார்.

சிறைவாசத்திலிருந்து பாதுகாத்த நபருக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அச்சுறுத்தல் விடுப்பது பொறுத்தமற்றது. ஜனாதிபதியொருவர் பேசக் கூடிய முறைமையிலிருந்து விலகி தரமற்ற வகையில் விஜயதாஸவுடன் தொலைபேசியில் பேசியுள்ளார்.

செய்யும் தொழில் பற்றி அறியாவிட்டால் மறைந்த ராஜபக்ஷக்களின் கௌரவத்துக்கு இழுக்கை ஏற்படுத்தாமல் தயவு செய்து பதவியை ஒப்படைத்துவிட்டுச் செல்லுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வலியுறுத்துகின்றேன். ஜனாதிபதி என்ற பதவியின் கௌரத்தைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இராணுவத்திலும் நீங்கள் உயர் பதவி வகிக்கவில்லை. கேர்ணலாக மாத்திரமே செயற்பட்டீர்கள். ஒழுக்க விழுமியங்கள், முக்கியத்துவம், பொறுப்பு, அச்சமற்ற நிலை இன்றும் இராணுவத்துக்கு உள்ளது. ஜனாதிபதி பதவியும் தற்காலிகமானது என்பதை மறந்து விட வேண்டாம். மனிதாபிமானமே நிரந்தரமானது. எனவே, தயவு செய்து இவ்வாறான நடத்தைகளை மாற்றிக் கொள்ளுங்கள்.

ஒரு ஹிட்லரைப் போன்று செயற்படுங்கள் என்று கூறுகின்றனர். ஆனால், ஹிட்லருக்கு என்ன நடந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஹிட்லரைப் பற்றி வரலாற்றில் கூட எழுத முடியாது. ஹிட்லருக்கு என்ன ஆயிற்று என்பதை அவரும் அறியவில்லை, அவரைச் சார்ந்தோரும் அறியவில்லை. எனவே, ஒரு மனிதனாகச் செயற்படுங்கள் – என்றார்.

## வவுனியாவில் இராணு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஏ – 9 வீதியில் வவுனியா நோக்கி சட்டவிரோதமான முறையில் மரங்களை ஏற்றிச் சென்ற வாகனத்தை ஓமந்தை நகர் பகுதியில் அமைந்துள்ள சோதனைச்சாவடியில் கடமையில் இருந்த இராணுவத்தினர் வழிமறித்துள்ளனர்.

இதன்போது மரக்கடத்தல்காரர்கள் வாகனத்தை நிறுத்தாமல் ஓட்டிச் சென்றதுடன், கடமையில் இருந்த இராணுவத்தினர் மீதும் மோதியுள்ளனர்.

இதனால் நீண்ட தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர் வீதியில் வீசப்பட்ட நிலையில் படுகாயமடைந்துள்ளார். மற்றொரு சிப்பாயும் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

காயமடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மரங்களைக் கடத்திச் சென்ற வாகனம் வீதிக்கரையில் விபத்துக்குள்ளாகி நின்றமையுடன், அதன் சாரதி தப்பித்து ஓடியுள்ளார்.

அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரத் தொடர்புகளுக்கு - 076 443 8618/ 076 443 8619

Australian Skilled Visa
Engineers (Civil & Mechanical), Nurses, Engineering Diploma holders in HNDE, NDES, NDT, C & G
Australian Skilled – Recognised Graduate Visa
BSc.Engg from University of Moratuwa or Peradeniya or Jaffna or Ruhuna
HOTLINE: 0766228891
தொடர்புகளுக்கு:-
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

Online. Cleaning & Caring (PVT) LTD
உங்கள் வீடுகள், கடைத் தொகுதிகள் மற்றும் நிறுவனங்கள், அலுவலக பணியிடங்களுக்கு சுத்திகரிப்புச் சேவை தேவைப்படுபவர்களும்.
வீட்டுப் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு வேலைகளுக்கு ஆட்கள் தேவைப்படுபவர்களும் தொடர்புகொள்ளவும்.
வீட்டு பணியாட்கள் தேவை. 20 - 55 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 077 435 0737

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.
றொட்டி, கிழங்கு றொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
சமையல் உதவியாளர்கள்.
சுத்திகரிப்பு செய்பவர்கள்.
ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.
077 652 9583

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
எமது சேவையூடாக 11 kg க்கு மேல் பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கான
மாபெரும் பரிசுப்போட்டி
நீங்களும் வெற்றியாளராகலாம்...
Contact :
021 221 56 56
076 122 15 66
070 330 55 00
பிரான்ஸ், ஜேர்மனி பெல்ஜியம்,
1100/=
(11 kg க்கு மேல்)
டென்மார்க் நெதர்லாந்து
லண்டன் 1000/=
(11 kg க்கு மேல்)
1ம், 2ம், 3ம் பரிசு : 15kg பொதிகள் அனுப்பும் செலவு இலவசம்...
4 முதல் 10 வரை : 3600/=
பெறுமதியான ஆடைகளுக்கான 10L சலவைத்திரவம் 01 இலவசம்...
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி கைதடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு கனகராயன் குளம்
மல்லாவி மன்னார் வவுனியா திருகோணமலை மட்டக்களப்பு கொழும்பு

# சமையல் எரிவாயு விலை அதிகரிக்கும் சாத்தியம்?



எதிர்வரும் மே மாதமளவில் சமையல் எரிவாயுவின் விலை 195 ரூபா முதல் 200 ரூபா வரையில் அதிகரிக்கக் கூடும் என அரச வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

12.5 கிலோ கிராம் எடையுடைய லிட்ரோ நிறுவனத்தின் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 700 ரூபாவாலும் லாப் நிறுவனத்தின் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 655 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகார சபையிடம் அனுமதி கேட்டுக் கொண்டுள்ளதாக அந் நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன.

உலகசந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளதுடன் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றுக்கான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதால் தமது நிறுவனங்களுக்குப் பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே, தற்போது காணப்படும் விலையில் சமையல் எரிவாயு சிலிண்டர்களைத் தொடர்ந்தும் விற்பனை செய்வதற்கு முடியாதென அந்நிறுவனங்கள் அரசாங்கத்திடம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையின் உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

'சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பதற்கு நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளபோதிலும் அது தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை'. – எனத் தெரிவித்துள்ளார்.

ST.ANTONY'S COMPUTER
2 YEAR WARRANTY
மேசைக்கணிகள் (Desktop Pc) 60,000 ரூபா முதல்
மடிக்கணினிகள் (Laptops) 65,000 ரூபா முதல்
4 CHANNEL DVR 5MP CAMERA 4 21500/= Only
போட்டோபிரதி இயந்திரம் (photo copy machine) 1,09,900 ரூபா முதல்
acer DELL hp Pioneer
021 222 4865
075 069 8608
189, K.K.S Road, Jaffna Town.

BRENS Fashion Planet
Reborn Signature Monster
எங்களிடம் பெண்களுக்கான அனைத்து ஆடைகளும், பிரத்யேகமான திருமணம், பூப்புனித நீராட்டு விழா மற்றும் சுப நிகழ்வுகளுக்கு சாறி பிளவுஸ் ஆரிவேக்ஸ் சிறந்த முறையில், குறித்த தவணையில் செய்து தரப்படும்.
பிறென்ஸ் பஷன் பிளானட்
ஆண்கள், பெண்களுக்கான அனைத்து ஆடைகள்
சிவன் கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
Fb.Brens Fashion Planet
Email:brensfashionplanet@gmail.com
075 527 9110
077 332 1937
021 2221 2777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தோற்றுப் போகும் நாடு

**ஐக்கிய இலங்கைக்குள் – ஒன்றுபட்ட நாட்டுக்குள் – உரிய அதிகாரப் பகிர்வுடன், கௌரவமான தீர்வு ஒன்றைப் பெறுவதற்கு இலங்கைத் தமிழர்கள் விடாது மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை. அவர்களின் நீதி முறையான கோரிக்கை ஓங்கி ஒலித்த போதிலும் தென்னிலங்கையில் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது.**

**தமிழர் தரப்பின் நெறிமுறையான கோரிக்கை சிங்களத்தைப் பொறுத்த வரை புறக்குடத்து நீராக – விழலுக்கிறைத்த நீராக – வீணாகி விட்டமைதான் எமது அனுபவம்.**

**சரியாக ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதைய ராஜபக்ஷக்கள் அரசிடம் இதே கருத்தை, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெளிவாக முன்வைத்திருந்தார். அவர் அன்று தென்னிலங்கை மக்களை நோக்கிச் சொன்னவைதான் இன்று நடக்கின்றன.**

***“உரிய அரசியல் அதிகாரங்களைப் பெற்று, தமது அரசியல், குடியியல், பொருளாதார, சமூக, கலாசார விடயங்களைத் தாமே நிர்வகிக்கும் ஆட்சியுரிமையை ஈட்ட வேண்டும் என்ற எமது இனத்தின் அரசியல் விருப்பு நியாயமானது. அது, தர்மத்தின் பாற்பட்டது; வரலாற்றின் வேரில் இருந்து எழுந்தது; அது எமது மக்கள் சமூகத்தின் ஓர் அடிப்படையான மனித உரிமையும் கூட. எமது அரசியல் விருப்பை அடைவதற்காக நாம் முன்வைக்கும் தீர்வானது – வேறு எந்த ஓர் இனத்தினதும் இறையாண்மையைக் கேள்விக்கு உட்படுத்தாதது; இந்த நாட்டின் ஐக்கியத்தைப் பிரிக்கும் கபட நோக்கங்கள் எதுவும் இல்லாதது; வேறு எந்த ஒரு நாட்டினதும் தேசிய நலன்களைப் பாதிக்கும் எண்ணங்கள் அற்றது. இந்த நாட்டிற்குள், உங்களது பூர்வீக நிலங்களில், உங்களுக்கான அதிகாரங்களைப் பிரயோகித்து நீங்கள் வாழ்வது போலவே, தமிழ் பேசும் மக்களும், தமது பூர்வீக நிலங்களில், தமக்கான அதிகாரங்களைப் பிரயோகித்து வாழும் உரிமையை உறுதிப்படுத்த முனைகின்றார்கள் என்ற அடிப்படை விடயத்தை நீங்கள் தயவு செய்து விளங்கிக்கொள்ள வேண்டும். எனவே, தனிப்பட்ட அரசியல் உள்நோக்கங்களுக்காக, இன முரண்பாட்டை முனைப்புறச் செய்து, இனத்துவேசத்தைத் தூண்டும் விதமாக முன்வைக்கப்படும் கொள்கைகளைப் புறக்கணித்து – தமிழினத்தின் நியாமான அரசியல் அபிலாசைகளைப் புரிந்து, அங்கீகரித்து, அவர்களையும் சகோதரர்களாக அரவணைத்து – ஐக்கிய இலங்கைக்குள் நல்லிணக்கத்துடன் வாழ நீங்கள் முன்வரவேண்டும்.***

***“ஆனால், இன்றைய சிறீலங்கா அரசாங்கமோ, தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு காணும் அரசியல் விருப்புறுதி எதனையும் கொண்டிருக்கவில்லை. மாறாக – தீர்வு காண்பதை நோக்கி எடுக்கப்படும் முயற்சிகளைத் தாமதப்படுத்தி, தவிர்த்து, ஒரேயடியாகக் கைவிடும் கபட யுக்தியினையே அது செயற்படுத்துகின்றது. ராஜபக்ஷ அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்துமே – நேர்மையற்று, விவேகமற்று, முதிர்ச்சியற்று இருக்கின்றமையுடன், வெறுமனே இனவாத நிலைப்பாட்டினை முதன்மைப்படுத்துபவையாகவே இருக்கின்றன. இந்த அரசாங்கம் தனது இந்தக் கபட நிலைப்பாட்டை விடாப்பிடியாகத் தொடர்ந்தும் கைக்கொண்டிருக்குமானால், அது, இந்த நாட்டை, முன்னெப்போதும் இல்லாதவிதமான ஒரு பின்னடைவை நோக்கி, மிகத் தெளிவாக இட்டுச்செல்கின்றது என்றே அர்த்தமாகும். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கிடைத்திருக்கும் இந்த இறுதி வாய்ப்பைக் கச்சிதமாகப் பயன்படுத்தி, இதயசுத்தமாக எம்மோடு கைகோர்க்க இந்த நாட்டின் அரசாங்கம் தவறுமிடத்து, இந்த நாடு ஒரு வரலாற்றுப் பின்னடைவைச் சந்திக்கப் போவது உறுதி என்பதை நான் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.”***

**– ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் சம்பந்தன் எச்சரித்த அந்தப் பாதையில் முன்னெடுப்போதும் இல்லாதவாறு வீறுகொண்ட போக்கில் மூர்க்கத்துடன் எட்டி நடைபோடுகின்றது கோட்டாபய ராஜபக்ஷ அரசு.**

**சம்பந்தன் எச்சரித்தமைபோல ஒரு பெரும் வரலாற்றுப் பின்னடைவு நிலையை – தோற்றுப் போன தேசம் என்ற நிலைமையை – நாடு எட்டுவது தூரத்தில் இல்லை என்பது நிச்சயம்.**

**அதை நோக்கித்தான் விடயங்கள் கட்டவிழ்கின்றன. அதன் இறுதி அத்தியாயத்திற்கான பிள்ளையார் சுழி போன மாதத்தில் ஜெனிவாவில் போடப்பட்டிருப்பதாகவே களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

## டெங்கைக் கட்டுப்படுத்தும் செயற்பாடு மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுப்பு



தற்போது ஏற்பட்டுள்ள மழையுடனான காலநிலை காரணமாக மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட பகுதிகளில் புகை விசிறும் செயற்பாடுகளை நேற்று (சனிக்கிழமை) காலை முதல் சுகாதார திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

இதேவேளை, மட்டு. சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் வாராந்தம் 10 பேர் வரையில் டெங்கு நோயின் பாதிப்புக்கு உள்ளாகின்றமை இனங்காணப்பட்டுள்ளது. அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என மட்டு. மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கிரிசுதன் தெரிவித்துள்ளார்.

மேலும் மழையுடன் கூடிய காலநிலை தற்போது நிலவுகின்றமையினால், சுற்றாடலில் நீர் தேங்கும் இடங்களை தூய்மைப்படுத்துதல் மற்றும் நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவான பொருள்களை சுற்றாடலிலிருந்து அகற்றுதல் ஆகியவற்றை மேற்கொள்ளுமாறு பொதுமக்களிடம் சுகாதாரப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## உணவுப்பொருள்களில் தீங்கு விளைவிப்பவை; விரிவான விசாரணைக்கு கோப் குழு உத்தரவு

இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களான தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட உணவுப்பொருள்களில் தீங்கு விளைவிக்கும் பொருள்கள் அடங்கியிருந்தமை தொடர்பாக உடனடி மற்றும் விரிவான ஆய்வை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழு (கோப்) சுகாதார அமைச்சின் அதிகாரிகளிடம் கேட்டுள்ளது.

அத்தகைய அதிகாரம் சுகாதார அமைச்சகத்திடம் உள்ளது என அந்தக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

உணவு பரிசோதனைக்கான ஆய்வக வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும், உணவு பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் விரைவாகத் திருத்தப்பட வேண்டும் என்றும் பொது கணக்குகளுக்கான குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸவிதான அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் உணவுப் பாதுகாப்புக்கான திட்டத்தை செயற்படுத்தாமை காரணமாக தற்போது பல சிக்கல்கள் எழுகின்றன என்பது தொடர்பில் கோப் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் அழகு சாதனப் பொருள்களில் அதிக தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் உள்ளன என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய கூட்டத்தின்போது வலியுறுத்தினார்.

## வன்முறைகளும் மீறல்களும் இடம்பெற வழிவகுக்கும் ஜனாதிபதியின் பயங்கரவாதத் தடை விதிமுறைகள்

### சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டிருக்கும் பயங்கரவாதத்தடை தொடர்பான விதிமுறைகள் ஏற்கனவே மிகவும் ஆழமான குறைபாடுகளைக் கொண்டிருந்த பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் மூலம் மேலும் வன்முறைகளும் மீறல்களும் இடம்பெறுவதற்கு வழிவகுக்கும் என்று சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச யூரர்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

பயங்கரவாதத்தடை தொடர்பான விதிமுறைகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது.

அதில் 11 அமைப்புக்கள் ‘தீவிரவாத அமைப்புக்களாக’ இனங்காணப்பட்டிருக்கின்றமையுடன் இது போன்ற அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு மாறாக செயற்படுபவர்களை 20 வருடங்களுக்கும் அதிகமான காலம் சிறைப்படுத்தவும், அத்தகைய செயற்பாடுகள் அல்லது அவற்றை முன்னெடுப்போருடன் தொடர்புகளைப் பேணியவர்களை 10 வருடங்களுக்கும் அதிகமான காலம் சிறைப்படுத்தவும் முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுதல் என்ற பெயரில் மோசமான விதிமுறைகளை நடைமுறைப்படுத்துகின்ற இலங்கையின் நிறைவேற்றதிகாரப்போக்கின் தன்மையே தற்போதும் பின்பற்றப்பட்டுள்ளது.

எவ்வித விசாரணைகளுமின்றி ஒருவரை இருவருடகாலம் வரை தடுத்துவைப்பதற்கு அனுமதியளிக்கும் தீவிரமயமாக்கலை ஒழித்தல் தொடர்பான விதிமுறைகள் வெளியிடப்பட்டு ஒரு மாதகாலத்தின் பின்னர் இந்த விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தன்னிச்சையான கைது நடவடிக்கைகள் தொடர்பான அடிப்படைத் தராதரங்களை மீறுவதற்கான நியாயமாக தேசியப் பாதுகாப்பு என்ற விடயத்தைக் குறிப்பிடுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில் குடும்பஸ்தர் கொலை: தீவிர விசாரணைகளில் பொலிஸார்

கிளிநொச்சி – சிவபுரத்தில் குடும்பஸ்தர் அடித்து கொல்லப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் சிவபுரத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான மாயழகு மனோகரன் (வயது – 42) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டு தினமான கடந்த 14ஆம் திகதி இரவு 9 மணியளவில், இந்தப் பகுதியில் இருவர் முரண்பட்டுக் கொண்டு இருந்துள்ளனர்.

இதன்போது அவ்வழியாகச் சென்ற குறித்த நபர், முரண்பட்டுக்கொண்டிருந்த அவரது உறவினரிடம் பிரச்சினை குறித்து வினவியுள்ளார்.

இதன்போது மற்றையவர், குறித்த நபர் மீது கடுமையாக தாக்கியுள்ளார். அப்போது தாக்குதலுக்கு இலக்கான அவரை, ஏனையோர் உடனடியாக கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பலனளிக்காது என வைத்தியர்கள் தெரிவித்ததும் மீண்டும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் தாக்குதலுக்கு இலக்கானவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அவரது உடல் பிரேத பரிசோதனையைத் தொடர்ந்து உறவினர்களிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைத் தாங்கள் முன்னெடுத்துள்ளனர் எனவும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் ஒரு வெளிச்ச அறை



"சட்டத்தின் சிறந்த விளைவைப் பெற முதலில் ஒவ்வொரு குடிமகனும் சட்டம் எமது நலனுக்காகவே உருவாக்கப்பட்டது என்பதில் தெளிவுபெற வேண்டும். அவ்வாறு பெறும் தெளிவானது சரியான பாதைக்கு இட்டுச் செல்லக் கூடியதாக இருக்க வேண்டும். சட்டங்களைப் பின்பற்றாமல் இருப்பதும் தவறு; பின்பற்றுபவர்களுக்கு இடையூறு செய்வதும் தவறு.

**பஸ்றி ஸீ. ஹனியா**
**சட்டத்துறை மாணவி**
**யாழ். பல்கலைக்கழகம்**

## சட்டம் என்றால் என்ன?

சட்டம் என்றால் என்ன என்ற கேள்வி அடிப்படையாகவே எல்லோரிடமும் உருவாகுவது வழக்கம். அதற்கான பதில்தான் சரியாக வழங்கப்படுகின்றதா? இல்லையா? என்பது இன்னும் வினாவாகவே இருந்து கொண்டிருக்கின்றது.

எது எவ்வாறாக இருப்பினும் உலகில் பிறந்த ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறான வாழ்க்கையை நாம் விரும்பும் வகையில் அப்படியே முழுமையாக வாழ்ந்தோமா? வாழ்கின்றோமா? வாழ்வோமா? என்றால் நிச்சயமாக இல்லை. ஏதோ ஓர் ஒழுங்கு விதிகள், கட்டுப்பாடுகள், நெறிமுறைகள் சூழ்ந்திருக்கின்றன.

இவ்வாறாக எம்மைச் சூழப்பட்ட வேலியே சாதாரண பொருளில் 'சட்டம்' எனப் பொருள்படும். எம்மில் பலர் சட்டம் என்றால் கட்டுப்பாடுகள் என்ற புரிந்துணர்வோடு இருக்கின்றார்கள். பொதுவாக சட்டம் என்பது நாம் எவ்வாறு சரியாக வாழ வேண்டும் என்பதற்கான ஒழுங்கு முறையாகும்.

ஒவ்வொரு அரசும் நிர்வாகம் செய்வதற்காகச் சில விதிகளையும் ஒழுங்குகளையும் உருவாக்குகின்றன. இவ்விதிகளுக்கும் ஒழுங்குகளுக்கும் ஓர் அரசின் எல்லைகளுக்குள் வாழும் மக்கள் மாத்திரம் கட்டுப்படல் வேண்டும். அரசுக்குள் அதன் அதிகாரங்கள் மீறப்பட்டால் மீறுபவர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள். சாதாரணமாக இவ்விதிகள், ஒழுங்குகளே சட்டங்கள் என அழைக்கப்படுகின்றன.

உண்மையில் ஒழுங்கமைக்கப்பட்ட சமூக வாழ்க்கை என்பது சில விதிகள் அல்லது சட்டங்கள் இன்றி சாத்தியமற்றதாகும். சமூகத்தில் காணப்படும் நிறுவனங்கள், அமைப்புக்கள் கூட தம்மை முகாமை செய்வதற்குச் சில துணைவிதிகளை உருவாக்குகின்றன. ஆயினும், சட்டம் என்ற சொல் அரசால் அதற்குரிய பிரமாணத்துக்கு ஏற்ப இயற்றப்பட்டு பிரயோகிக்கப்படுகின்றபோதே அதற்குரிய உண்மையான பெறுமானத்தைப் பெறுகின்றது.

சட்டம் என்றால் கடினமானது, பயங்கரமானது என்ற வியூகங்களில் பார்க்கப்படுகின்றது. ஆம், நிச்சயமாக சட்டம் என்பது பயங்கரமானது; கடினமானதுதான் அதனை மீற நினைப்பவர்களுக்கு.

## சட்டத்துக்கான வரைவிலக்கணம்

சொல் இலக்கணப்படி சட்டம் என்ற சொல் மொழிக்கு மொழி வேறுபட்ட நிலையில் தோற்றம்



பெற்றதாகவும் பயன்படுத்தப்படுவதாகவும் உள்ளது. பழைய ரியுரொனிக் (Teutonic) சொல்லாகிய லாக் (Lag ) என்பதிலிருந்து லோ (Law) என்னும் சொல் பெறப்பட்டதாகக் கூறப்படுகின்றது. லாக் (Lag) என்னும் சொல் சமமான முறையில் இடுதல், வைத்தல், அமைத்தல் என்ற கருத்துடையது. சிலர் இலத்தீன் சொல்லாகிய ஜுஸ் (Jus) என்பதிலிருந்து லோ (Law) என்ற சொல் பெறப்பட்டது எனக் கூறுகின்றார்கள். ஜுஸ் (Jus) என்ற சொல் பிறிதொரு இலத்தீன் சொல்லாகிய ஜுங்கேரே (Jungere) என்பதுடன் தொடர்புடையதாகும். இச்சொல்லின் பொருள் கட்டுப்பாடு (Bond) அல்லது பிணைத்தல் (Tie)என்பதாகும்.

சட்டம் என்றால் என்ன என்பதற்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் பல்வேறு சிந்தனையாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. அரிஸ்ரோட்டில், தீவிர உணர்ச்சிகளை நீக்கிய பகுத்தறிவே சட்டம் எனக் கூறுகின்றார். ஒஸ்ரின், இறைமையின் கட்டளையே சட்டம் எனக் கூறுகின்றார். கிராப்பி (Krabbe), மனிதர்களின் பொதுவானதும் குறிப்பானதுமான உணர்வுகள் அல்லது உரிமைகளில் இருந்து வருகின்ற எழுதிய அல்லது எழுதாத விதிகளின் முழுமை அல்லது தொகுப்பே சட்டம் எனக் கூறுகின்றார். சல்மொன்ட் (Salmond) என்பவர், அரசால் அங்கீகரிக்கப்பட்டதும், நீதியான நிர்வாகத்தில் பிரயோகிக்கப்பட்டதுமான விதிகளின் திரட்சியே சட்டம் எனக் கூறுகின்றார். ஒக்ஸ்போட் ஆங்கில அகராதி, அதிகாரத்தால் சட்டக் கோப்புச் செய்யப்பட்ட விதிகளே சட்டம் எனக் கூறுகின்றது. இவ்வரைவிலக்கணங்களூடாக ஒரு பொது முடிவுக்கு வருவதாயின் ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தில் இறைமை பெற்ற அரசியல் அதிகாரத்தால் செயற்படுத்தப்படும் சமூக அங்கத்தவர்களின் புற நடத்தைகள் பற்றிய பொதுவான விதிகளே சட்டம் ஆகும்.

## சட்டம் எவ்வாறு உருவாக்கப்பட்டது?

ஆரம்ப காலங்களைப் பொறுத்த வரைக்கும் சனத்தொகை மிகக் குறைவாக இருந்த காலங்கள். அவ்வாறு இருந்த சனத்தொகையினரும் ஓர் ஆற்றங்கரையை அண்டிய நாகரிகங்களாகப் பிரிந்தே வாழ்ந்தனர். ஒரு குறிப்பிட்ட குழுவில் இருக்கும் மக்கள் தத்தமது தேவைகளைத் தாமே நிறைவேற்றிக் கொண்டனர். காலம் நகர நகர சனத்தொகை அதிகரிக்க தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு வளங்களில் மட்டுப்பாடுகள் ஏற்பட்டன.

அவ்வாறு வளங்களில் மட்டுப்பாடுகள் ஏற்படும் போது சேமிக்க வேண்டிய தேவையும் கூடவே ஏற்பட்டது. அதற்கமைய சேமித்த குழுவினர் செல்வம் கொண்டவர்களாகவும், சேமிக்காத குழுவினர் செல்வம் இல்லாதவர்களாகவும் காணப்பட்டனர். அவ்வாறு செல்வம் இல்லாதவர்கள் சேமித்த குழுவினரிடமிருந்து சேமிப்புக்களைப் பறிக்க முயலும்போது அங்கே பல குழப்பங்கள் உருவாக ஆரம்பித்தன. அவ்வாறு ஏற்படும் குழப்பங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் எதிர்காலத்தில் குழப்பங்கள் ஏற்படாது இருப்பதற்கும் ஏதாவது ஓர் ஒழுங்குமுறை தேவையாக இருந்தது. அவ்வாறு தேவைப்பட்ட வேளையில்தான் சட்டம் என்ற கருத்தியல் உருவானது.

அவ்வாறு உருவாக்கப்பட்ட சட்டம் அம்மக்களை ஆட்சி செய்ததோடு அச்சட்டத்தைப் பாதுகாக்க ஆட்சியாளரையும் உருவாக்கியது. அவ்வாறு உருவாக்கப்பட்ட சட்டங்களால் மனிதர்களுக்கிடையில் குழப்பங்கள் குறைவாகக் காணப்பட்டன. இதனை அவதானித்த சட்டக்காவலனான ஆட்சியாளன் மற்றும் குடிமக்கள் தொடர்ச்சியாக சட்டங்களை உருவாக்கத் தொடங்கினர். இதன் பிரதிபலன் இன்று வரைக்கும் நாம் ஒரு சட்டத்தின் கீழ் ஆட்சி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

சுருக்கமாக விளக்குவோமாயின் உலகின் படைப்புகள் சமமானவை அல்ல. அவ்வாறான படைப்புகளில் வலியனவைக்கும் வலுவற்றவர்களுக்கும் இடையிலான சமமின்மை காரணமாக உருவாகிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதே சட்டம் உருவான பின்னணி ஆகும்.

## சட்டம் ஏன் உருவாக்கப்பட்டது?

சட்டம் உருவாக்கப்பட்ட நோக்கத்தை எளிமையாக நோக்கின் வாகனங்கள் செல்லும் பாதையில் வாகனங்கள் பாதையின் எதிரெதிர் திசைகளில் பயணிக்கும்போது விபத்துக்கள் அதிகமாகவே இருக்கும். ஒரே திசையில் பயணிக்குமானால் விபத்துக்கள் நிகழாது. இவ்வாறு ஒரே திசையால் அனைவரையும் பயணிக்க வைப்பதற்காகவே சட்டம் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு மனிதரும் தங்கள் விருப்பத்துக்கும் மனதுக் கும் சூழலுக்கும் ஏற்ப நடந்துகொள்வாராயின் அவ்வா றான நடத்தை பல குழப்பங்களையும் பிரச்சினைக ளையும் விளைவிக்கும். அனைவரும் ஒரு கட்டுக் கோப்பான அறநெறியில் பயணிப்பார்களாயின் குழப்பங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

## சட்டத்துக்கு ஏன் கட்டுப்பட வேண்டும்?

சட்டத்துக்கு ஏன் கட்டுப்பட வேண்டும் என்ற குதர்க்கமான கேள்வி எல்லோர் மனதிலும் எழுவது வழமை. அதற்கான விடை, கட்டுப்படாவிட்டால் தண்டனை கிடைக்கும் என்பதாகும். தண்டனை என்பதற்கு மேலாக கட்டுப்படாவிட்டால் இங்கிருக்கும் மனித ஜீவராசிகள்



அல்ல எந்த ஜீவராசிகளும் வாழ முடியாது என்பதாகும்.

சட்டமற்ற சமூகம் குழப்பத்துக்கு மேல் குழப்பத்தை ஏற்றுக்கொண்டு கடைசியில் அனைவரையும் தாக்கி பூஜ்ஜியத்தைப் பெருக்கியது போல் ஒன்றுமே இல்லாது ஆகிவிடும். இத்தனை சட்டங்கள் நடைமுறையில் இருந்தும், இத்தனை கட்டுப்பாடுகள் இருந்தும் இன்னமும் நாம் சுபீட்சமான ஒரு சூழலில் வாழவில்லை. நாம் பல பிரச்சினைகளை அனுபவித்துக்கொண்டே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

கட்டுப்பாடுகளை மதிக்கவில்லை என்றால் பிரச்சினைகளை நாம் எதிர்கொண்டே தீர வேண்டும்.

**(15 ஆம் பக்கம் பார்க்க...)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல் ஆரவாரங்கள்: இல்லாத ஊருக்கு வழிதேடும் முயற்சி!

ந.லோகதயாளன்



**மாவை சேனாதிராசா நல்ல மனிதர் ஆனால் முதலமைச்சருக்கு பொருத்தமற்றவர் வேலன் சுவாமியை பரிசீலிக் கலாம் என்றார் சி.வி.விக்னேஸ்வரன் ஆனால், நல்லவேளை தற்போது பிரேமானந்தா சுவாமி உயிரோடு இல்லை என்கின்றனர் சிலர்.**

மாகாணசபைத் தேர்தல்களைப் பொறுத்தவரை இல்லாத ஊருக்குப் பாதை தேடும் பரிதாபகங்களைக் கண்டு வடக்கு மக்கள் எள்ளி நகையாடும் நிலைமையே தற்போது காணப்படுகின்றது. இது அடுத்த தேர்தல் வரைக்கும் கிடைத்த ஆவலாகவே இருக்கப் போகின்றது.

ஏனெனில் 2013ஆம் ஆண்டு உருவான முதலாவது வடக்கு மாகாண சபை 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் நிறைவுற்ற பின்னர் அடுத்த மாகாண சபை தொடர்பில் அரசியலாளர்களிடையே பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது. இந்த எதிர்பார்ப்பு இடையே கடும் போட்டி என்பது அரசிய லில் சகஜம்தான்.




இந்த நிலையிலேயே அண்மையில் ஓர் ஊகத்தின் கேள்விக்குப் பதிலளித்த முன்னாள் முதல்வரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான க.வி.விக்னேஸ்வரன் மாகாண முதலமைச்சர் பதவிக்குத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசா பொருத்தமற்றவர் என்றும், வேலன் சுவாமியைப் பரிசீலிக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

### அரசியல் கருத்திற்கு பிள்ளையார் சுழி

முன்னாள் முதல்வரின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழ்தேசியக் கட்சியின் தலைவரான சிறீ



காந்தாவோ வேலன் சுவாமி பொருத்தமற்றவர், சிறந்த ஒரு நிர்வாகியே தேவை, முன்னாள் முதல்வர் கூறியது அவரது கருத்து என்றார்.

இதேநேரம் விக்னேஸ்வரனின் கருத் திற்கு அவரின் முன்னாள் மாகாண சபை சகா ஒரு வரின் முகப் புத்தகக் கருத்து ஒன்று 'நல்லவேளை பிறேமானந்தா சுவாமி உயிரோடு இல்லை' என்கின்றது.

இவற்றிற்கு ஒரு படி மேலே சென்ற வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானமோ மாகாண சபையை சீரழித்த விக்கினேஸ்வரனிற்கு என்ன தகுதி உண்டு மாவை. சேனாதிராயாவை விமர்சிப்பதற்கு, விக்னேஸ்வரன் ஒரு கட்சி கூட்டணியின் தலைவர் என்றால் விக்னேஸ்வரனையே அரசியலிற்கு கொண்டு வந்த கட்சியின் தலைவரான மாவையை அவர் விமர்சிப்பது அரசியல் நாகரீகமற்றது என்றார்.

இவை அனைத்திற்கும் வேலன் சுவாமிகளிடம் இருந்து கருத்து வெளிவர முன்னர் பரபரக்கப்பட்டது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்திலிருந்து உண்ணாவிரதங்கள் வரையிலும் பெயர் எடுத்த சுவாமி ஏற்கனவே சின்மியா மிஷனில் இருந்து விலகி தனித்த ஆதீனத்தை உருவாக்கப் பாடுபடும் இந்தச் சமயத்தில் அரசியல் பயணத்தையும் தொடர்வார் என எவரும் கருதவில்லை. ஏனெனில் இவ்வாறானவர்களின் கருத்தை இனிமேல் ஏற்க மாட்டோம் என்னும் தொனியில் கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரின் கூற்றை மெய்ப்பிக்கும் செயலாகவே அது அமையும் என்றே சுவாமியும் கருதியோ என்னவோ நான் தேர்தல் அரசியலிலோ அல்லது கட்சி அரசியலிலோ எக்காலத்திலும் ஈடுபட மாட்டேன் எனக்கூறி அவரது பெயர் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளார்.

இதற்கிடையில் அரசினால் பழிவாங்கப்பட்ட அதிகாரி தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

இதேநேரம் இதற்கு முன்பு ஒரு தடவை இன்னுமொருவரின் பெயர் பகிரங்கப்படுத்தப் பட்டு அது தற்போது மௌனிக்கப்பட்ட நிலையில் இருப்பவரான முன்னாள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரான நா.வேதநாயகன் பெயரும் பல கட்சிகளில் முணுமுணுக்கப்படுகின்றது. ஏனெனில் தேர்தலை இலக்கு வைத்து அரசியல் ரீதியில் அவர் பழி வாங்கப் பட்டவர் என்ற கருத்து முன் வைக்கப்படுகின்றது.

மாகாண சபை முறைமை என்பது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு முயற்சியாகப் பிரசவிக்கப்பட்டிருந்தாலும் அது இன்று இலங்கை அரசு சிறுவர்களிற்கு வழங்கும் இனிப்பாக எண்ணி தமிழர்களை மட்டுமல்லாமல் முழு இலங்கையிலும் உள்ள அடுத்த நிலைத் தலைவர்களை சாந்தப் படுத்தும் ஓர் கட்டமைப்பாகவே பார்க்கப்படுகின்றது. அன்றி தம் மக்களின் நிர்வாக இலகுபடுத்தலிற்கான அலகாகவேனும் இதனை நோக்க அரசு தயாராக வில்லை.

### இளையவர்களை கவரும் கூற்று

இந்த நிலையில் எவர் முதலமைச்சர் வேட்பாளர் எனக் கூறாது விடினும், இளம் வேட்பாளர்களே அதிகம் களமிறக்கப்பட வேண்டும் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கும் கருத்து பலரிடம் வரவேற்பை பெற்றாலும், குறிப்பாக இளைஞர்கள் அதனை ஏற்றாலும், இளையர் ஒருவர் மாநகர முதல்வராக இருந்து அதிக வேகத்தில் பயணித்து முட்டி மோதி விபத்திற்குள்ளான நிலைமையில், கற்றறிந்த பட்டறிவாளரே அவசியம் என சில அனுபவசாலிகள் கூறுவதும் ஆராயப் படவேண்டியே உள்ளது. அதற்காக முதியோர் இல்லமாக மாற்றவும் கோரவில்லை.

இவை அனைத்திற்கும் அப்பால் வெறுமனே அரசியல் உணர்ச்சி பேச்சை பேசிவிட்டு, அறிக்கையை வாசிக்கும் தளமாகவும், தீர்மானம் நிறைவேற்றும் இடமாகவும் அன்றி போரினால் அழிவடைந்த மாகாணத்தைக் கட்டியெழுப்பி வேலை வாய்ப்பற்ற ஆயிரக் கணக்கானோரிற்கு வேலை வாய்ப்பினையும், 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள், 12 ஆயிரம் மாற்று வலுவுள்ளோரின் அடிப்படை வாழ்வியலை நிலைநிறுத்தப் பாடுபடும் ஒருவரை முதலமைச்சராகக் கொண்டு மாகாண சபை அமைவதே சிறந்தது என்றும் அரசியலை நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விட்டு விடுங்கள் என்றும் பலரும் கூறுகின்றனர்.



இதேநேரம் மாகாண சபைத் தேர்தல் அறிவிக் கப்படும்போது இவர்களுடன் இன்னும் அதிகமானவர்களின் பெயர்கள் வரும், அவற்றின் மத்தியில் இருந்து தரமானவரை – அதாவது இன்னும் அதிகமாக செயல்படக்கூடியவரை – தேர்வு செய்வது பொருத் தமானது.

ஏனெனில் வடக்கின் முதலாவது மாகாண சபை உருவாகும்போது மக்களிடம் இருந்த எதிர்பார்ப்பு தற்போது இல்லை. அந்தளவிற்கு எதிர்பார்ப்பு இன்மையாக – அவ நம்பிக்கை கொள்ள – வைத்தமைக்குக் கடந்த மாகாண சபையின் செயல்பாடுதான் காரணமானது.

தற்போது மாகாண சபை பற்றிய ஆர்வம் மக்களைவிட அரசியல்வாதிகளிடத்திலேயே அதிகம் காணப்படுகின்றது. இதனைப் போக்கி மக்களிடமும் ஆர்வத்தை ஏற்படுத்தும் அளவிற்கு செயல்பட வேண்டிய தேவை இனி வரும் மாகாண சபைக்கு உண்டு. அதனால் பேச்சளவில் அன்றி செயல் அளவில் செயல்பட்டால் மட்டுமே அது முடியும் . அதற்காக உழைக்கக் கூடிய ஒருவர் முதலமைச்சராக



வந்தால் மட்டுமே முடியும்.

இதேநேரம் தற்போது தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்திற்கு நாளை பிரதமர் தலைமையில் கூடும் கூட்டத்தில் தீர்வு கிட்டும் என எதிர் பார்க்கப்படுகின்றது. அவ்வாறு கிட்டாது போனால் சுதந்திரக் கட்சி, விமல் வீரவன்ஸ அணி மற்றும் எஸ்.பி.திசநாயக்கா தரப்புப் போன்றவை தனி அணியாகப் போகும் சூழ்நிலை உருவாகும். எது,எப்படியோ அரசுக் கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள பிளவை பிரதமர் சரி செய்வரா என்பது நாளை தெரியும். எதிர்கால அரசியல் நகர்வுகளில் தாக்கத்தைச் செலுத்தும்.

ஆளும் கட்சிக்குள் பிளவு ஏற்படுவது முழுமையாக ஆட்சி மாற்றத்துக்கு விட்டாலும் அதன் தாக்கம் ஆளும் தரப்பில் பின்னடைவாகக் காணப்படும். இதனால். மாகாண சபைத் தேர்தல் முறைமைகளைப் பரிந்துரைப்பது முதல் அனைத்துப் பணிகளும் தாமதமடையும் வாய்ப்பும் உண்டு. மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் காலத்தில் அரசு அதிகம் உச்சரித்தாலும் தற்போது அது தொடர்பில் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

மாகாண சபை தேர்தலிற்காக வேட்பு மனு என்ன வடிவில் வரும் என்பதே இன்னும் கேள்வியாகவுள்ள நிலையில் தேர்தல் இந்த ஆண்டு இறுதியிலேனும் வருமா என்பதே அடுத்த கேள்வி.

அதனால் இப்போது இல்லாத ஊருக்கு வழி தேடுவதனை விடுத்து இருக்கும் விடயங்களில் கவனத்தைத் திருப்புவதே பொருத்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி கோட்டா அச்சுறுத்தினார் என்று பகிரங்கமாகக் கூறியமை தார்மீகம் அன்று

## சரத் வீரசேகர தெரிவிப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு அச்சுறுத்தும் வகையில் கதைத்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ ஊடக சந்திப்பில் பகிரங்கமாகக் கூறியமை தார்மீகமானது அல்ல என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கோட்டை ரஜமஹா விகாரையில் நேற்று நடைபெற்ற தலைக்கு எண்ணெய் பூசும் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் சரத் வீரசேகர மேலும் தெரிவிக்கையில் –

துறைமுக நகரத் திட்டம் தொடர்பில் விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு பிரச்சினைகள் இருந்தால், அதனை ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துரையாடி இருக்கலாம். எனினும் அவர் அப்படிச் செய்யவில்லை.

துறைமுக நகரத்தில் பாதுகாப்பு பொறுப்பு இலங்கை பொலிஸாருக்கே இருக்கின்றது. அந்த நிலத்தில் ஹெலியைத் தரையிறக்கக் கூட அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இப்படியான பின்னணியில் விஜேதாஸ ராஜபக்ஷ வெளியிட்டுள்ள விடயங்கள் தவறானவை. துறைமுக நகரத் திட்டம் என்பது இலங்கை பொருளாதாரத்தின் திருப்புமுனை.

அதனை ஆரம்பத்திலிருந்தே சீர்குலைக்க பல்வேறு தரப்பினர் முயற்சித்து வருகின்றனர். இதனால், விஜேதாஸ ராஜபக்ஷவின் செயற்பாடுகள் தொடர்பிலும் சந்தேகம் உள்ளது எனவும் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

# போலிப் பிக்குவை அடையாளம் காண பொதுமக்களிடம் உதவிகோரும் பொலிஸ்

மீகலாவ – பகுதியில் அமைந்துள்ள விகாரை ஒன்றில் போலி பிக்குவாக வருகைதந்த நபரை அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மீகலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விகாரை ஒன்றுக்கு தான் ஒரு பிக்கு எனத் தெரிவித்து நபரொருவர் வருகை தந்துள்ளமையுடன், அவர் மீது சந்தேகம் கொண்ட விகாராதிபதி அவரிடம் விவரங்களைக் கேட்டு அறிய முயற்சித்த போது மேற்படி நபர் அப்பகுதியில் காணப்பட்ட வனப்பகுதிக்குத் தப்பி ஓடியுள்ளார் என பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த நபர் ஏதேனும் குற்றச் செயலில் ஈடுபடுவதற்காகவே இவ்வாறு மாறுவேடத்தில் வந்திருக்கலாம் என்று கருதப்படுவதால் சந்தேக நபரை அடையாளம் காணுவதற்காகப் பொலிஸார் பொது மக்களிடம் உதவி கோரியுள்ளனர்.

# சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள் கிளிநொச்சியில் கோலாகலம்



கிளிநொச்சியில் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு, நேற்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் நடத்தப்படும் 2 ஆம் மொழி சிங்கள பயிற்சியின் 2 ஆம் அணியின ரால் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கிளிநொச்சி மாவட்ட செயலக தொழிற்பயிற்சி வளாகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஓலை பின்னுதல், தேங்காய் துருவுதல், பலூன் உடைத்தல், யானைக்கு கண் வைத்தல் உள்ளிட்ட பல விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

இதில் ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலாரும் மிகவும் ஆர்வமாக பங்கேற்றிருந்தமையை அவதானிக்க கூடியதாக இருந்தது.

# நடிகர் விவேக் அவர்கள் நாட்டிய மரங்களால் என்றென்றும் எம் நினைவில் வாழ்வார்

## பொ.ஐங்கரநேசன் அஞ்சலி



நடிகர் விவேக் அவர்கள் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பிச் சின்னக் கலைவாணர் என்று தமிழ்த் திரையுலகில் புகழ் பெற்றவர். வெள்ளித்திரையில் கிடைத்த புகழைக் கட்டாந்தரையில் மரங்களை நடுகை செய்வதற்குப் பயன்படுத்திப் பசுமைக் காவலர் என்று பெயர் பெற்றவர். அவர் புகழுடம்பு மறைந்தாலும் அவர் நாட்டிய மரங்களால் எம் நினைவில் என்றென்றும் வாழ்வார் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் திரையுலகின் புகழ்பெற்ற நடிகர்களில் ஒருவரான விவேக்கின் மறைவு குறித்து பொ.ஐங்கரநேசன் வெளியிட்டிருக்கும் அஞ்சலிக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அஞ்சலிக்குறிப்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்–

நடிகர் விவேக் நகைச்சுவையில் தனக்கெனத் தனியான பாணியை உருவாக்கியவர். ரசிகர்களைச் சிரித்து விட்டு மட்டும் போகாமல் சிந்திக்கவும் தூண்டியவர். சமுதாயத்தில் புரையோடிப்போயிருக்கும் மூடநம்பிக்கைகளைக் களைவதற்குத் தன்நடிப்பாற்றலால் விழிப்புணர்வு ஊட்டியவர். நிழலில் மட்டுமல்லாமல் நிஜத்திலும் சீர்திருத்தக் கருத்துகளின் பரப்புரையாளராகச் சளைக்காது பணியாற்றியவர்.

பாரதத்தின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் அறிவுரைப்படி சூடாகும் பூமியைக் குளிர்விக்கும் நோக்கில் ஒருகோடி மரங்களை நடுகை செய்யும் பணியை ஆரம்பித்தவர். கிரீன் கலாம் என்ற அமைப்பை நிறுவி அதனூடாக முப்பத்து மூன்று லட்சத்துக்கும் அதிகமான மரங்களை நடுகை செய்த நிலையில் மரணம் அவரை அரவணைத்துக் கொண்டது.

மரங்களை நடுகை செய்பவர்களின் நினைவுகளுக்கு மரணம் இல்லை. அவர்கள் நடுகை செய்த மரங்களாலும் அம்மரங்களிலிருந்து வீழ்ந்து பரவும் விதைகளின் துளிர்ப்பாலும் சந்ததிகள் கடந்தும் அவர்கள் நினைவிற் கொள்ளப்படுவார்கள். விவேக் அவர்களின் நாமமும் பசுமை உலகில் அழியாது நிலைத்திருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# 5 ஆயிரம் ரூபா கிடைக்கப்பெறாத குடும்பங்களுக்கு வழங்க ஏற்பாடு

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ் மாவட்டத்தில், 5 ஆயிரம் ரூபா புத்தாண்டு நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படாத, தகுதிபெற்ற குடும்பங்களுக்கு, அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், அவர் இதனை தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 178 குடும்பங்கள் 5 ஆயிரம் ரூபா புத்தாண்டு நிவாரணக் கொடுப்பனவுக்காகத் தகுதி பெற்றுள்ளன.

அவற்றில் ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 855 குடும்பங்களுக்கு இதுவரையில் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது எனவும் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.



**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள குளிர்பான விநியோகஸ்த நிலையத்துக்கு SALES REP தேவை.
மாதம் 45,000 சம்பாதிக்கலாம்.

தொடர்புகளுக்கு
0774737737/ 0773257747


# துறைமுக நகர சட்டமூலத்தை அனைவரும் எதிர்க்கவேண்டும்: விவாதத்தில் தேசத் துரோகிகளை அடையாளம் காணலாம்

## எல்லே குணவங்ச தேரர் காத்திருப்பு



துறைமுக நகரைச் சீனாவுக்கு வழங்குவது சம்பந்தமான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்த பின்னர் தேசப்பற்றாளர்களையும், தேசத்துரோகிகளையும் அடையாளம் காண முடியும் என எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

துறைமுக நகரத்தின் எதிர்கால நடவடிக்கைகள் இலங்கையின் மாகாணசபைகள், நகரசபை முறை உட்பட இலங்கை அரசின் நிர்வாக முறைக்கு அப்பால் சென்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கை துறைமுக நகரின் கணக்காய்வுகளில் தலையிட முடியாது என்ற நிலைமை உருவாகும் என்பதால், குறித்த சட்டத்தை நாடாளுமன்றத்தில் அனைவரும் எதிர்க்க வேண்டும்.

எமது நாட்டை கடல் பரப்பு உலகில் பிரிக்கின்றது. கடலை நிரப்பியே துறைமுக நகரம் உருவாக்கப்பட்டது. எமது நாட்டின் வரைபடமும் தற்போது மாறியுள்ளது. உருவாக்கப்பட உள்ள துறைமுக நகருக்குள் நாம் செல்ல முடியாது.

அதற்கு வெளிநாட்டு நாணயங்கள் மூலமே கொடுக்கல் வாங்கல் நடைபெறும். இது தனியான நாடு. நாட்டைப் பிரிக்க நாடாளுமன்றத்தில் சட்ட மூலத்தைக் கொண்டு வருகின்றனர்.

நாட்டை நேசிக்கும் அறிவுஜீவிகள் இது தொடர்பில் அமைதியாக இருப்பார்கள் எனில், எமக்கு உண்மையான தேசப்பற்றாளர்களையும் தேசத்துரோகிகளையும் இலகுவாக அடையாளம் காணமுடியும். அரசு துரோகியாக கூட இருக்கலாம், ஆனால் தேசத்துரோகியாக மாறுவது நல்லதல்ல. சீனா எமக்குக் கடனை அள்ளிக் கொடுக்கின்றது.

அவை டொலர்கள் அல்ல, சீனாவின் யுவான். எமக்கு இதுபற்றி சரியாகத் தெரியாது. எனினும் சீனா தனது கொடுக்கல், வாங்கலைச் சரியான முறையில் தீர்த்துக் கொள்கிறது.

கடல் என்பது எமது வளம். கடலுக்குள் இருக்கும் கனிய வளம் பற்றி தற்போது யாரும் பேசுவதில்லை. அதுவும் சீனாவுக்கா என்பது எமக்குத் தெரியாது. இவற்றுக்கு இடையில், எமது மீன் வளத்தை கொள்ளையிட இந்தியாவுக்கு அனுமதிப்பத்திரத்தை வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முயற்சித்து வருகிறார்.

இதற்கு இடமளிக்க முடியாது. இந்த வளங்கள் மூலம் எமது நாட்டு மக்களே பாதுகாக்கப்படுவார்கள் எனவும் எல்லே குணவங்ச தேரர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# தடைசெய்த அமைப்புகளின் உறுப்பினர்களை பள்ளிவாசல்களின் நிர்வாகத்தில் இருந்து விலகுக

## வஹ்ப் சபை அறிவிப்பு

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தடை செய்யப்பட்டுள்ள 11 இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகளின் உறுப்பினர்கள் பள்ளிவாசல்களில் நிர்வாக சபைகளில் உறுப்பினர்களாக அங்கம் வகிப்பார்கள் எனில், அவர்கள் அந்த பதவிகளில் இருந்து விலகுமாறு வஹ்ப் சபை அறிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற வஹ்ப் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என முஸ்லிம் சமய விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.பீ.எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

தேசிய தவ்ஹித் ஜமாத், சிலோன் தவ்ஹித் ஜமாத், அகில இலங்கை தவ்ஹித் ஜமாத், தேசிய தவ்ஹித் ஜமாத் உட்பட 11 இஸ்லாமிய அமைப்புகளுக்கு அரசாங்கம் தடைவிதித்து, விசேட வர்த்தமானி அறி வித்தலை அண்மையில் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 9 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

நாட்டின் ஒன்பது மாவட்டங்களுக்கு கடுமையான மின்னல் மற்றும் இடியுடன் கூடிய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களிலும் பொலன்னறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் 75 மி.மீ க்கும் அதிகமான மழை பெய்யக்கூடும். இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும்.

அதன்படி, முல்லைத்தீவு, வவுனியா, அநுராதபுரம், பொலன்னறுவை, மாத்தளை, கண்டி, நுவரெலியா, பதுளை மற்றும் மொனராகலை உட்பட 9 மாவட்டங்களுக்கு வானிலை தொடர்பாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இடி மின்னல் காரணமாக ஏற்படும் சேதத்தைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இடியுடன் கூடிய மழைக்காலங்களில் நெல் வயல்கள், தேயிலைத் தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி நீர்நிலைகள் போன்ற திறந்த பகுதிகளைத் தவிர்க்கவேண்டும். இடியுடன் கூடிய மழைக்காலங்களில் கம்பி தொலைபேசி மற்றும் இணைக்கப்பட்ட மின்சார சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும்.

ஈருருளி, உழவு இயந்திரங்கள் மற்றும் படகுகள் போன்ற திறந்த வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும் போன்ற அறிவுறுத்தல்களை வானிலை மையம் விடுத்துள்ளது.

# துறைமுக நகரம் சம்பந்தமான சட்டத்தால் தனிநாடோ சீன காலனியோ உருவாகாது

## அரசாங்கம் உத்தரவாதம்

கொழும்பு துறைமுக நகருக்காக கொண்டுவரப்பட்டுள்ள உத்தேச சட்டத்தின் மூலம் தனி நாடோ, சீனாவின் காலனியோ உருவாகாது என இராஜாங்க அமைச்சர் ஷெகான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

முதலீட்டாளர்களுக்கு நட்புறவான சூழலை உருவாக்குவதே இந்த சட்டத்தை கொண்டு வருவதற்கான நோக்கம் எனவும் அவர் கூறியுள்ளார்.

துறைமுக நகர திட்டம் தொடர்பில் அரசாங்கம் கொண்டு வர எதிர்பார்த்துள்ள யோசனைகள் ஊடாக தனியான நாட்டை உருவாக்குவதோ, துறைமுக நகரம் தனியாக மாறுவது என்ற எதுவும் நடக்காது. எனினும் முதலீட்டாளர்களை வரவழைக்க கொள்கை ரீதியான மாற்றங்கள் நடக்கும்.

நாட்டுக்குப் பொருத்தமான முதலீட்டாளர்களை வரவழைப்பது மற்றும் முதலீட்டாளர்களுக்கு நட்புறவான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது மாத்திரமே இந்த சட்டத்தின் மூலம் நடக்கும் எனவும் ஷெகான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## 05.04.2021 தொடக்கம் 09.04.2021 வரையிலான சந்தையில் முக்கிய பயிர்களின் விலை நிலைவரம் ஒரே பார்வையில்!

### தம்புள்ள, Pettah, சந்தையின் விலை நிலைவரம்

05.04.2021 தொடக்கம் 09.04.2021 வரையான காலப்பகுதியில் பெற்றா, தம்புள்ள சந்தைகளில் தேசி, உள்ளூர் சிவப்பு வெங்காயம், பெரிய வெங்காயம், தேங்காய், கோவா, தக்காளி, போஞ்சி, கரட், கத்தரி, பூசணி, பச்சை மிளகாய், பப்பாளி, அன்னாசி போன்ற பயிர்களின் விலைகளில் தளம்பல்நிலை அவதானிக்கப்பட்டது. இதனால் இவை முக்கிய கவனத்துக்குரிய பயிர்களாக இருந்தன.

ஒவ்வொரு நாளும் சந்தைக்கு கொண்டுவரப்படும் பொருள்களின் தரம் அளவு போன்றவற்றினால் விலை தீர்மானிக்கப்பட்டு மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும். சில பொருள்கள் சில மாவட்டங்களிலிருந்து மட்டும் கொண்டுவரப்படும். சில பொருள்கள் பல மாவட்டங்களிலிருந்து மட்டும் கொண்டுவரப்படும். குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக விலையில் ஏற்ற இறக்கம் காணப்படும் இந்தக் கிழமை எந்தெந்த பொருள்கள் எந்தெந்த பகுதியிலிருந்து வழங்கலை பூர்த்தி செய்தன அல்லது செய்யவில்லை என பார்ப்போம்.

01. போஞ்சி – நுவரெலியா மற்றும் மாத்தளை பகுதிகள்.
02. தக்காளி – தம்புள்ளையை அண்டிய பகுதிகள் சூரியவெவ.
03. பெரிய வெங்காயம் (இறக்குமதி) – துருக்கி பாகிஸ்தான் மற்றும் நெதர்லாந்து.
04. பச்சை மிளகாய் – யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் பகுதிகள்.
05. கத்திரிக்காய் – கலென்பிந்துநுவேவா பகுதி.
06. தேசி – மொனராகல பகுதி.
07. இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் – இந்தியா மற்றும் பாகிஸ்தான்.
08. அன்னாசி – புத்தளம் பகுதிகள்.
09. உருளைக்கிழங்கு (உள்ளூர்) – யாழ்ப்பாணம் வெலிமட.

கடந்த புத்தாண்டுக் கொண்டாட்டங்களால் உள்ளூர் சின்ன வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய் போன்ற பொருள்களுக்கான சந்தைக்கேள்வி உயர்ந்துள்ளது.

### Pettah சந்தை மொத்த விலைகள்

| | 12.04.2021 | 13.04.2021 | 14.04.2021 | 15.04.2021 | 16.04.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 140 | 110 | 90 | 100 | 120 |
| கேரட் | 125 | 120 | 120 | 100 | 180 |
| கோவா | 100 | 90 | 90 | 95 | 120 |
| தக்காளி | 150 | 80 | 80 | 80 | 150 |
| கத்திரிக்காய் | 200 | 150 | 160 | 155 | 280 |
| பூசணி | 55 | 60 | 60 | 60 | 55 |
| புடலங்காய் | 70 | 70 | 70 | 70 | 70 |
| பச்சை மிளகாய் | 190 | 135 | 145 | 160 | 300 |
| தேசி | 80 | 70 | 70 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 230 | 230 | 293 | 283 | 255 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 220 | 210 | 295 | 275 | 255 |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 67 | 64 | 61 | 67 | 58 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 130 | 110 | 117 | 117 | 120 |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | 75 | 70 | 75 | 73 | 70 |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | 505 | 505 | 505 | 500 | 500 |
| தேங்காய் (சராசரி) | | | | | |

### தம்புள்ள சந்தை மொத்த விலைகள்

| | 12.04.2021 | 13.04.2021 | 14.04.2021 | 15.04.2021 | 16.04.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 125 | 145 | 88 | 125 | 115 |
| கேரட் | 133 | 115 | 95 | 125 | |
| கோவா | 135 | 78 | 78 | 48 | 145 |
| தக்காளி | 115 | 55 | 68 | 78 | 85 |
| கத்திரிக்காய் | 255 | 175 | 105 | 205 | 225 |
| பூசணி | 65 | 45 | 45 | 50 | 58 |
| புடலங்காய் | 85 | 75 | 58 | 53 | 95 |
| பச்சை மிளகாய் | 265 | 195 | 245 | 220 | 395 |
| தேசி | 75 | 65 | 65 | 80 | 95 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 340 | 278 | 228 | 248 | 248 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 298 | 298 | 238 | | 238 |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | 73 | 72 | 60 | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 78 | | | 118 | |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 128 | 113 | 128 | | 100 |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | 518 | 503 | 495 | | |
| தேங்காய் (சராசரி) | 79 | 69 | 69 | 64 | |

### தம்புள்ள சந்தை பழங்கள் மொத்த விலைகள்

| பழங்கள் | 12.04.2021 | 13.04.2021 | 14.04.2021 | 15.04.2021 | 16.04.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 105 | 63 | 73 | 80 | 90 |
| பப்பாசி | 75 | 65 | 98 | 83 | 120 |
| அன்னாசி | 113 | 105 | 105 | 115 | |
| ஆப்பிள் (இறக்குமதி) | 59 | 59 | 59 | 59 | |
| ஆரஞ்சு (இறக்குமதி) | 55 | 55 | 55 | 55 | |

### தம்புள்ள சந்தை சில்லறை விலைகள்

| | 12.04.2021 | 13.04.2021 | 14.04.2021 | 15.04.2021 | 16.04.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 145 | 165 | 108 | 95 | 135 |
| கேரட் | 153 | 135 | 116 | 145 | |
| கோவா | 155 | 98 | 98 | 68 | 165 |
| தக்காளி | 135 | 75 | 88 | 98 | 105 |
| கத்திரிக்காய் | 275 | 195 | 125 | 225 | 245 |
| பூசணி | 85 | 65 | 65 | 70 | 78 |
| புடலங்காய் | 105 | 95 | 78 | 73 | 115 |
| பச்சை மிளகாய் | 285 | 215 | 265 | 240 | 415 |
| தேசி | 95 | 85 | 85 | 78 | 115 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 350 | 288 | 238 | 258 | 258 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 308 | 308 | 248 | | 248 |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 88 | 83 | 82 | 70 | |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 138 | 123 | 138 | 128 | 113 |
| தேங்காய் (சராசரி) | 84 | 74 | 74 | 69 | 74 |

### தம்புள்ள சந்தை பழங்கள் சில்லறை விலைகள்

| பழங்கள் | 12.04.2021 | 13.04.2021 | 14.04.2021 | 15.04.2021 | 16.04.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 125 | 83 | 93 | 100 | 83 |
| பப்பாசி | 95 | 85 | 118 | 103 | 95 |
| அன்னாசி | 133 | 125 | 125 | 135 | 125 |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைக்கோ கலையரசனுக்கோ முதலமைச்சராக தகுதி இல்லை

## வடக்கில் தலைவரும் தெற்கில் செயலாளரும் தோற்றார்கள் மக்கள் தூக்கி எறிந்தபின்னும் பதவிக்காக அலைகின்றார்கள்

### அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் காட்டத்துடன் சுட்டிக்காட்டு

**பாறுக் ஷிஹான்**

வடக்கில் தலைவரையும் கிழக்கில் செயலாளரையும் தேர்தலில் தோற்கடித்து வடக்கு, கிழக்கில் இருந்து மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தூக்கி எறிந்துள்ளனர். கூட்டமைப்பின் அநியாயத்தால் வடக்கு, கிழக்கில் இளம் சமுதாயம் வேலைவாய்ப்பின்றி அலைகின்றனர். எனவே, இளம் சமுதாயத்தை பாழாக்காது மக்கள் இனியாவது சிந்தியுங்கள் என அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

மாகாண சபை முதலமைச்சர் தொடர்பில் கூட்டமைப்பில் எழுந்துள்ள பிரச்சினை பற்றி அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு அவர் கூறினார். மேலும் தனது கருத்தில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வடக்கு, கிழக்கில் தொழிலாளர் வர்க்கமாகிய நாங்கள் தூக்கி எறிந்து விட்டோம். கடந்த 20 வருடங்களாக அண்ணன் பிரபாகரனும் தமிழீழ விடுதலைப்புலிகளும் சொன்ன ஒரே காரணத்துக்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கைகோர்த்திருந்தோம். அவர்கள் உழைக்கும் தொழிலாளர்களான எமக்கு அரசியல் ரீதியான அங்கீகாரம் ஒன்றை வழங்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர். இதனால் நாங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளோம். தொழிலாளர் வர்க்கத்தைக் கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு புறக்கணித்ததன் காரணமாக கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிர்ப்பலை ஏற்பட்டதுடன் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தோற்கடிக்கப்பட்டார். அவர் ஏன் தோற்கடிக்கப்பட்டாரெனின் உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தினருக்கு செய்த துரோகமாகும். அதனை அவர் உணர வேண்டும். எமது தொழிற் சங்கம் வடக்கு, கிழக்கில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக மக்கள் சேவை மகேசன் சேவை என்ற ரீதியில் சேவை செய்து வருகின்றோம். இவ்வாறான தொழிற் சங்கத்தைப் புறந்தள்ளி அவர்களின் சுகபோகத்தை அனுபவித்ததன் விளைவே தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மக்களால் தூக்கி எறியப்பட்டார். நாங்கள் அவருக்கு எதிராக வடக்கு கிழக்கு மாகாணத்தில் செயற்பட்டோம். அவரைத் தோற்கடிக்க வேண்டும் என செயற்பட்டோம். இந்தச் செயற்பாட்டுக்கு எமது மன வேதனை தான் காரணமாகும். அத்துடன் மாவையின் மீது தனிப்பட்ட எவ்வித கோபதாபமும் இல்லை. ஆனால் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக செயற்பட்டதன் காரணமாகவே அவரைத் தோற்கடிக்க இரவு பகலாக நாம் பாடுபட்டோம். அதில் வெற்றியும் கண்டுள்ளோம்.

எம்முடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோபித்து கொண்டாலும் பரவாயில்லை. இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியது விடுதலைப்புலிகள் தான். இன்று விடுதலைப்புலிகள் இருந்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி இருப்பார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கடந்த காலங்களில் 22 ஆசனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மக்களின் ஆதரவுடன் பெற்றுக்கொடுத்திருந்தார். இதனைத் தற்போது உள்ள கூட்டமைப்பினரால் காப்பாற்ற முடியாது. ஏனெனில் விடுதலைப் புலிகள் தியாகிகள். இதனால் தான் 22 ஆசனங்கள் மக்கள் ஆதரவுடன் கிடைக்கப்பெற்றிருந்தன. தற்போது இதனைத் தக்க வைக்க முடியாமல் சுயநலத்துடன் செயற்படுகின்றனர். பொதுநலன் என்பதே கிடையாது. இதனால் தான் மக்கள் தொடர்ந்தும் கூட்டமைப்பைப் புறக்கணித்து வருகின்றனர். தற்போது 22 இல் இறங்கி 10 ஆசனங்களாகக் குறைந்துள்ளது. வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அருகதையற்றவர்கள் என்றே கூற வேண்டும். எனவே வடக்கு கிழக்கு மாகாண மக்கள் சிந்திக்க வேண்டும்.

வடக்கு மாகாண முதலமைச்சராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விக்னேஸ்வரன் என்பவரைக் கொண்டு வந்தனர். என்ன நடந்தது? நாங்களும் இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியில் விக்னேஸ்வரனின் வெற்றிக்காகச் செயற்பட்டோம். நடந்தது என்ன? மாகாண சபைக்கு வந்த நிதியைக் கூட மத்திய அரசுக்கு திருப்பி அனுப்பியது தான் மிச்சம். இப்படியான அரசியலைச் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாட்டை நினைத்து வெட்கமடைகின்றோம் வேதனையடைகின்றோம். இந்த மாகாணத்தைக் கைப்பற்றுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அருகதையற்றவர்கள். வடக்கு கிழக்கு முதலமைச்சர்கள் என்பவர்களை வித்தியாசமாக நோக்க வேண்டும். ஏனெனில் எமது மாகாணம் கடந்த 30 வருடங்களாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டதாகும். இங்கு தமிழ் பேசும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை முன்னேற்றுவதற்கு சிறந்த அர்ப்பணிப்புள்ள தலைமைத்துவம் உள்ளவர்களையே முதலமைச்சராக கொண்டுவர வேண்டும்.

மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களை முதலமைச்சர்களாகக் கொண்டு வரக்கூடாது என்பது தான் எமது கருத்து. வடக்கு, கிழக்கு மாகாண மக்களே நீங்கள் சிந்தியுங்கள். மாகாண சபை சிறப்பாக இயங்க வேண்டும் என்பது தான் எமது அவா. அமைச்சுக்களின் ஆலோசனை சபை ஒன்றை அமைப்பதற்கு வடக்கு, கிழக்கில் மாகாண சபையை ஆட்சி செய்த கூட்டமைப்பை நாம் கோரியிருந்தோம். ஆனால் எம்மை அவர்கள் தூக்கி எறிந்திருந்தார்கள். இதில் தற்போது யார் பாதிக்கப்பட்டார்கள் உழைக்கும் தொழிலாளர் வர்க்கமும் மக்களும் தான். நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்க்கக் காரணம் ஆலோசனை சபை விடயத்தை நிராகரித்து மக்களுக்கு எதிராகச் செயற்பட்டதால் ஆகும். இதனால் தான் தமிழரசுக்கட்சியின் செயலாளர் நாயகமும் தேர்தலில் கூட தோற்கடிக்கப்பட்டார். மக்களுக்காக செயற்படாததால் வடக்கில் தலைவரையும் கிழக்கில் செயலாளரையும் தேர்தலில் தோற்கடித்து மக்கள் தூக்கி எறிந்தனர். இதனால் தான் வடக்கு, கிழக்கில் இருந்து மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தூக்கி எறிந்துள்ளனர்.




எனவே இளம் சமுதாயத்தைப் பாழாக்காது மக்கள் இனியாவது சிந்தியுங்கள். கூட்டமைப்பின் அநியாயத்தால் வடக்கு, கிழக்கில் இளம் சமுதாயம் வேலைவாய்ப்பின்றி அலைகின்றனர். இதற்குக் காரணம் எதிர்கட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்து கொண்டு இளம் சமுதாயத்தின் வேலைவாய்ப்பை நிராகரித்தது. இந்த சாபம் தமிழ்த் தேசியக் கூட்டமைபபை சும்மா விடாது. நீங்கள் மக்களை ஏமாற்ற வேண்டாம். நானும் மக்களும் கூட்டமைப்பால் பாதிக்கப்பட்டுள்ளோம். எனது குடும்பம் கூட பாதிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் குடிசை வாழ்க்கையை உருவாக்கியவர்கள் யாவர்? நீங்கள் தான்(கூட்டமைப்பு) உருவாக்கியவர்கள். உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளில் எதுவும் செய்யவில்லை. நீங்கள் தொடர்ந்தும் பதவிக்காக ஓடித்திரிகின்றீர்கள். தகுதி இல்லாதவர்கள் அநேகர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து நாடாளுமன்றம், மாகாண சபை, பிரதேச சபைகளுக்குச் சென்றுள்ளனர்.

எனவே மக்கள் சிந்தித்து இனியாவது செயற்பட வேண்டும். இந்த அவல நிலையை மக்கள் உணர்ந்து எதிர்காலத்தில் செயற்பட வேண்டும். குறிப்பாக மாவை சேனாதிராசாவிற்கோ கலையரசனுக்கோ முதலமைச்சர் வேட்பாளராகத் தகுதி இல்லை என்பதே எமது நிலைப்பாடாகும். இந்த விடயம் பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த மக்களின் கருத்து என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன். - என்றார்.

## நீர் அளவுமானிகள் திருட்டுக்காக தெரணியகலை தவிசாளர் கைது

நீர்வழங்கல் அதிகார சபைக்குச் சொந்தமான நீர் அளவு மானிகளுடன் தெரணியாகலை பிரதேச சபைத் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

தெரணியகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புருகம பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும், நீர்வழங்கல் வேலைத்திட்டத்துக்காக வைக்கப்பட்டிருந்த 477 நீர் அளவு மானிகள் காணாமல் போயுள்ளன என, கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி இந்த வேலைத்திட்டத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர், தெரணியகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், களஞ்சியசாலையின் எழுதுவினைஞர் ஒருவர் உட்பட மூன்று பேரைக் கைது செய்திருந்தனர். அதற்கமைய 98 நீர் அளவு மானிகளுடன் தெரணியகலை பிரதேச சபைத் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவை திருடப்பட்ட பொருள்கள் என்று அறிந்திருந்தும் அவற்றை அருகில் வைத்திருந்தமை குற்றமாகும். அதன் காரணமாகவே பிரதேசசபைத் தவிசாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சந்தேக நபருக்கு எதிராக பொது சொத்து சட்ட விதிகளுக்குகீழ் சட்ட நடவடிக்கை எடுக்கபடவுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெரணியகலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஹெரோயின், 4 லட்சம் ரூபா பணம் பொரளையில் பெண் ஒருவர் கைது

பொரளை - மகஸின் வீதியில் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 4 லட்சத்து 13 ஆயிரத்து 350 ரூபா பணத்துடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகஸின் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு தெற்கு பிரிவுக்குச் சொந்தமான குற்றப்புலனாய்வு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது ஹெரோயின் மற்றும் பணத்துடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, பொரளை பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவரிடமிருந்து 245 கிராம் 450 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 4 லட்சத்து 13 ஆயிரத்து 350 ரூபா பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபரான பெண் மேலதிக விசாரணைகளுக்காக பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் பொலிஸார் அவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கொரோனா வைரஸ் கிருமிகள் காற்றில் பரவும் தன்மையுடையவை

**புதிய ஆய்வில் வெளியான தகவல்**

கொரோனா வைரஸ் காற்றில் பரவும் தன்மையுடையது என்று அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் உறுதியான சான்றுகள் கிடைத்திருக்கின்றன என லான்செட் மருத்துவ இதழ் கூறியுள்ளது.

இந்த வைரஸ் காற்றில் பரவுவதால் மக்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே உலக சுகாதார அமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் இதனைக் கருத்தில் கொண்டு புதிய முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆய்வாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். மேலும் ஓர் அறைக்குள் இருக்கும் போது அதிகம் பரவுவதில்லை என்றும் பொதுவெளியில்தான் காற்றில் அதிகமாக வைரஸ் பரவுகிறதாகவும் அந்த ஆய்வுத் தகவல் தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# 'சின்னக் கலைவாணர்' விவேக் காலமானார்!

## பேரதிர்ச்சியில் தமிழ்த் திரையுலகம்



மக்களைச் சிரிப்போடு சிந்திக்கவும் வைத்ததால் 'சின்னக் கலைவாணர்' என அழைக்கப்பட்ட தமிழ்த் திரையுலக நகைச்சுவை நடிகர் விவேக் (வயது 59) இன்று அதிகாலை காலமானார்.

விவேகானந்தன் என்ற இயற்பெயர் கொண்ட விவேக், திரையுலகில் விவேகம் மிக்க நகைச் சுவையால் தனித்தன்மையோடு மிளிர்ந்தவர். துணை நடிகராக அறிமுகமாகி, சிரிக்க வைக்கும் திறனால் வளர்ந்து, ஒரே ஆண்டில் சுமார் 20 படங் களில் நடிக்கும் அள வுக்கு மிகவும் பிசியான காமெடி நடிகராக திகழ்ந்தவர்.

அறிமுக கதாநாயகர்கள் தொடங்கி, முன்னணி கதாநாயகர்கள் வரை விவேக்கின் நகைச்சுவை திரைப்படத்தின் வெற் றிக்கு முக்கிய பங்களிப்பு செய்த காலம் தான், திரையுலகில் அவரது உச்சம்

நகைச்சுவை மூலம் இலஞ்சம், ஊழல், சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை, சமூக சீரழிவு தொடர்பான விழிப் புணர்வை ஏற்படுத்தியதால், அவருக்கு 'சின்னக் கலைவாணர்' என்ற அன்புப் பட்டம் வழங்கப்பட் டது. தமிழ் சினிமாவில் இதுவரை 220 இற்கும் மேற் பட்ட திரைப்படங்களில் நடித்து முத்திரை பதித்துள் ளார். அதே போல், மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் மீது கொண்ட பற்றின் காரணமாக அவரது கருத்துகளை மாணவர்களி டையே கொண்டு செல்வதில் முக்கியப் பங்காற்றி யவர். மேடைகள் தோறும் கலாமின் கருத்துகளைப் பேசி மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி யவர். சுற்றுச்சூழல் தொடர்பா கவும் அமைப்புகளை வைத்து மரம் நடுதல் போன்றவற்றை ஊக்குவித்த வர் விவேக். இதுவரை 33 லட்சத்துக்கும் அதிக மான மரக்கன்றுகளை நட்டுள்ளார். அதேபோல் கிராமங்கள் தோறும் மரம் நடும் இளைஞர்களை ஊக்குவித்தும் வந்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு விவேக்கின் 13 வயது மகன் பிரசன்னா குமார் அகால மரணமடைந்தது, அவரது வாழ்வின் பெருந்துயரமாக அமைந்து விட்டது. கடைசியாக அவர் 2020ஆம் ஆண்டில் தாராள பிரபு என்ற படத்தில் நடித்திருந்தார். நேற்று முற்பகலில் சென்னை சாலிக்கிராமத்தில் உள்ள தமது வீட்டில் விவேக் இருந்தபோது மூச்சுத்திண றல், மயக்கம் ஏற்பட்டு, வடபழனியில் உள்ள சிம்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மிகக்கடுமையான மாரடைப்பால் விவேக் பாதிக் கப்பட்டிருந்த நிலையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்து சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன. இதயம், நுரையீரலின் செயற்பாடுகளை மேற்கொள்ளும் எக்மோ கருவி மூலமும் விவேக்குக்கு சிகிச்சை அளிக் கப்பட்டது. முதல் நாள் வரை நல்ல உடல்நலத்தோடு காணப்பட்ட விவேக், திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட செய்தி, தமிழ கத்துக்கே அதிர்ச்சியான செய்தியாகவே அமைந் தது.

இந்நிலையில், தமிழ்த் திரையுலக ரசிகர்களைப் பேரதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டு, இன்று அதிகாலை 4.35 மணியளவில் நடிகர் விவேக் காலமானார். 59 வயதில் காலமான அவருக்கு அரசியல் தலை வர்கள், திரையுலக பிரபலங்கள், சமூக ஆர்வலர் கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# விவேக்கின் இறுதிக் கிரியை காவல்துறை மரியாதையுடன்

## தமிழக அரசு அறிவிப்பு



மறைந்த நடிகர் விவேக்கின் இறுதிக் கிரியை காவல் துறை மரியாதையுடன் நடைபெறும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

நடிகர் விவேக்கின் உடலை அரச மரியாதையுடன் தகனம் செய்ய அனுமதி கோரி, தமிழக அரசு தேர்தல் ஆணையத்துக்குக் கடிதம் அனுப்பியிருந்தது.

இதனைத் தொடர்ந்தே, விவேக்கின் இறுதிக் கிரியை காவல்துறை மரியாதையுடன் மேற்கொள்ள தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் தற்போது தேர்தல் விதிகள் அமுலில் உள்ளதால், அரசு தேர்தல் ஆணையத்திடம் அனுமதி கோரியிருந்தது.

இன்று மாலை விவேக்கின் உடல் காவல்துறை மரியாதையுடன், துப்பாக்கி குண்டுகள் முழங்க, தகனம் செய்யப்படவுள்ளது.

அவரின் கலை மற்றும் சமூக சேவையை கௌர விக்கும் முகமாகவே காவல்துறை மரியாதை செலுத் தப்படவுள்ளது.

விவேக்கின் உடல் விருகம்பாக்கத்திலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

திரைப் பிரபலங்களும், அரசியல் தலைவர்களும், ரசிகர்களும், அவரின் நண்பர்களும் அவருக்கு நேரில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நடிகர் விவேக்கின் உடல் இன்று மாலை விருகம்பாக்கம் மின் தகன மேடையில் தகனம் செய்யப்படும் என்று அவரின் குடும்பத்தினர் தெரிவித் துள்ளனர். இதேவேளை, நடிகர் விவேக் மறைவுக்கு தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

நடிகர் விவேக்கின் இடத்தை யாராலும் நிரப்ப முடி யாது. தனது ஈடு இணையற்ற கலை சேவையாலும், சமூக சேவையாலும் தமிழகத்துக்குப் பெருமை சேர்த் தவர் நடிகர் விவேக் என்று முதலமைச்சர் பழனிசாமி கூறியுள்ளார்.

சின்ன கலைவாணர் நடிகர் விவேக் மறைவு செய்தி அறிந்து வேதனையடைந்தேன். 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் திரையுலகில் சிறந்த நடிகராக தன் ஆளு மையை கோலோச்சியவர். எண்ணற்ற படங்களில் விவேக் நடிப்பு சிரிக்க வைத்ததோடு மட்டுமன்றி சிந்திக் கவும் வைத்தது.

தமிழகத்திற்கு பெருமை சேர்த்த விவேக்கின் மறைவு, திரைத்துறைக்கும் ரசிகர்களுக்கும் பேரிழப்பு. கலைச் சேவை யாலும், சமூக சேவையாலும் பெருமை சேர்த்த விவேக்கின் மறைவு மிகப்பெரிய இழப்பு. நடிகர் விவேக்கின் இடத்தை இனி எவராலும் நிரப்ப முடியாது என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சின்னக் கலைவாணர் எனத் திரையு லகில் புகழ்பெற்ற நகைச் சுவைக் கலைஞர் விவேக் மறைவு பேரதிர்ச்சி அளிக்கின்றது. பத்மஸ்ரீ விருது பெற்ற பெருமைக்குரியவர், கருணாநிதியிடம் தனி அன்பு கொண்டவர் நடிகர் விவேக் என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

# குடும்பஸ்தர் படுகொலை!

கிளிநொச்சியில் குடும் பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள் ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவபுரம் பகுதியில் குறித்த சம்பவம் புத்தாண்டு தினமான கடந்த 14ஆம் திகதி இடம்பெற் றுள்ளது.

தாக்குதலுக்குள்ளான நிலையில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் வைத்தியசா லையில் சேர்க்கப்பட்ட நிலை யில் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் 42 வயது டைய நான்கு பிள்ளை களின் தந்தையான மாய ழுகு மனோகரன் என்ற குடும்பஸ்தரே உயிரிழந் துள்ளார். சம்பவம் தொடர் பான விசாரணைகளைக் கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற னர்.

# வடமராட்சியில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்களுக்கு மறியல்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்., வடமராட்சி - முள்ளிப் பகுதி யில் விசேட அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இரு வரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கு மாறு பருத்தித்துறை பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தி யசாலையில் காயமடைந்த இருவ ரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களுடன் காணொளித் தொடர் புத் தொழில்நுட்பம் மூலம் விசா ரணை மேற்கொண்ட பதில் நீதிவான், இருவரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

காயமடைந்தவர்களில் ஒருவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலேயே தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரு கின்றார்.

இருவரும் சட்டவிரோத மண் கடத்தல்காரர்கள் என்றும், பொலிஸா ரின் உத்தரவை மீறிச் செயற்பட்டதால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினார் கள் என்றும், அவர்கள் பயணித்த மண் கடத்தல் வாகனம் அவர்களின் சொந்த இடமான துன்னாலையில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது என் றும் பருத்தித்துறைப் பொலிஸார் தெரி வித்தனர்.

# யாழில் கொரோனாவால் மேலும் ஒருவர் மரணம்!

(எஸ்.நிதர்ஷன்)

*கொரோனா வைரஸ் தொற்றால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் இன்று சாவடைந்தார்.*

*யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டிருந்த புன்னாலைக் கட்டுவன் கிராமத்தைச் சேர்ந்த 65 வயது பெண்ணே உயிரிழந்தார்.*

*இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் உறுதிப்படுத்தினார்.*

# சமவாய்ப்பை மறுக்கும் 'போர்ட் சிட்டி' சட்டமூலம்

## சஜித் அணி குற்றச்சாட்டு

கொழும்புத் துறைமுக நகரத்தை நிர் வகிப்பதற்கான ஆணைக்குழு சட்டமூலம் வெளிநாடுகளில் கறுப்புப் பணத்தை சேமிக்காத இலங்கையர்களுக்கு சம வாய்ப்பை மறுக்கின்றது என ஐக்கிய மக் கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்புத் துறைமுக நகர பொருளா தார ஆணைக்குழு தொடர்பாக அரசு முன்வைத்துள்ள சட்டமூலத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

குறித்த சட்டமூலம் போர்ட் சிட்டி ஆணைக்குழுவுக்கு அளவுக்கு அதிக மான அதிகாரத்தை வழங்கியுள்ளது என வும் எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

போர்ட் சிட்டி ஆணைக்குழுவுக்கு வெளிநாட்டவர்கள் நியமிக்கப்படுவதற் கான சாத்தியப்பாடுகள் உள்ளதால், மக் களின் தலைவிதி வெளிநாட்டவர்களால் தீர்மானிக்கப்படும் நிலை உருவாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சட்ட செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி திசத் விஜேகுணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை நன்மை அடையக்கூடிய திட்டமாக போர்ட் சிட்டி கருதப்பட்டாலும், இந்தச் சட்டமூலம் நாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

துறைமுக நகர ஆணைக்குழு சட்ட மூலத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி உயர்நீதிமன்றத்தில் இரண்டு மனுக் களைத் தாக்கல் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நலம் வாழ வைக்கும்



நம் சுயநலத்தில் பிறரை வாழ வைக்கும் அம்சங்கள் இருந்தால் அது நல்லது. பிறரை அழித்து நாம் வாழ வேண்டும் என்றால் அந்த சுயநலம் தவறு.

உங்களையும் உயர்த்திப் பிறரையும் உயர்த்துவது சுயநலம் கலந்த பொதுநலம். எனவே, சுயநலம் செயல்படவைக்கும். பொது நலம் வாழ வைக்கும்.

அறிவு சுயநலத்தோடு தான் சிந்திக்கத் தூண்டும்.

**'ஆளில்லாக் காட்டுக்குள்ளே ஆயிரம் பூ பூக்கிறது.**
**யாருமில்லை பார்ப்பதற்கு.**
**அப்புறம் ஏன் பூக்கிறது?'**

என்று ஒரு பழைய பாடல் உண்டு.

மனிதன், தான் பாராத இடத்தில் பூக்கள் பூப்பது ஏன் என்று கேட்கிறான். இது அறிவின் ஆணவம். ஆனால் பூக்களை மனிதன் மட்டுமா பார்க்கிறான். மனிதன் பாராத இடத்திலும் பூச்சிகள் பூக்களைப் பார்க்கின்றன. பறவைகளும் நதிகளும் பார்க்கின்றன. இதனை உணர்வது ஞானம். அறிவில் ஆரம்பித்து, ஞானம் நோக்கி நகர்வது தான் நல்லது.



தொகுப்பு -
ப்ரியமதா பயஸ் -

# 20 – 30 வயதுக்குள் இருப்பவர்களுக்கு 30 அறிவுரைகள்

உடலும் மனமும் பலமாக இருக்கும் வயதுகள் தான் இந்த 20 - 30. எவ்வளவு முடியுமோ அவ்வளவு உழைக்க வேண்டும்.

காதல் வயப்பட ஏற்ற வயதும் இந்த பகுதி தான். காதல் வந்தால் காதல் செய்யுங்கள்.

அந்த காதல் வெற்றி பெற்றால் நல்லது. இல்லாவிட்டால் அதை விட நல்லது. காதல் தோல்விக்கு பின்வரும் மன தைரியம் நிச்சயமாக ஒரு பக்குவப்பட்ட மனிதனை உருவாக்கும்.

நாம் செய்யும் ஒவ்வொன்றிலும் அதிக கவனம் வேண்டும். வாழ்வின் இலட்சியத்தை அடைய ஏற்ற வயது.

ஒரு செயலை செய்ய தொடங்கும் முன்பே வெற்றி அடைந்தால் எப்படி இருக்கும் என்று கனவு காண வேண்டும். அது வெற்றியை அடைய உந்து சக்தியாக இருக்கும்.

தோல்வி அடைந்தால் எப்படி இருக்கும் எனவும் கனவு காண வேண்டும். அப்போது தான் அந்த தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியும்.

முடிந்த அளவுக்கு நமக்கு இருக்கும் வாய்ப்புக்களை குறைத்துக் கொள்ள வேண்டும். ஒன்று போனால் இன்னொன்று என இருந்தால், அந்த ஒன்றிற்கான நம்முடைய உழைப்பு குறைவாக தான் இருக்கும். அது தான் இன்னொன்று உள்ளதே என எண்ணத் தொடங்கி விடுவோம்.

குடும்பத்தின் வரவு செலவு கணக்குகளை பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

பட்ஜெட் போட தெரிந்து கொள்ள வேண்டும்.

பெற்றோல் டீசல் விலையை மட்டுமல்லாது, காய்கறி விலையையும் அறிந்து கொள்ள வேண்டும்.

வாக்களிக்கும் உரிமையை அடைந்து விட்டோம். யாருக்கு அளிக்க வேண்டும் என்ற தெளிவு வேண்டும்.

மனிதர்களை படிக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் பார்க்கும், பழகும் ஒவ்வொரு மனிதர்களிடமும் ஒன்றை கற்றுக் கொள்ள வேண்டும். நல்லவரோ, மோசமானவரோ.

அரசியல் கற்றுக் கொள்ள வேண்டும். அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், வேட்பாளர்கள் பற்றிய அறிவு சிறிதளவேனும் வேண்டும்.

அதிகமாக அரசியலை படித்து விட்டு நாட்டை சீர்திருத்த அரசியலில் போட்டியிட எண்ணினாலும் நல்ல விடயம் தான். 25 வயதுதான் அதற்கு ஆரம்பம்.

அடிப்படை உரிமைகள், கடமைகள், மற்றும் சட்டம் பற்றிய அறிவையும் சிறிதளவு வளர்த்துக் கொள்வது நல்லது.

சமூக சேவையில் ஈடுபடாவிட்டாலும் சமூகத்தில் என்ன நடக்கிறது என்பதையாவது அறிந்து கொள்ள வேண்டும்.

செய்தித்தாள் வாசிக்க வேண்டும். முதல் பக்கத்தையும் 6 ஆவது பக்கத்தையும் தொடர்புபடுத்தி பார்க்க கற்றுக் கொள்ள வேண்டும்.

சுற்றுச்சூழல் பற்றிய அறிவும் கொஞ்சம் வேண்டும்.

வாட்ஸப் போன்ற சமூக வலைத்தளங்களில் ஏதேனும் **forward** செய்திகள் வந்தால் டக்கென்று ஒரு **swipe** செய்துவிட்டு கடந்து போகாமல் அதை வாசித்து, உண்மையா **fake** செய்தியா என அறிந்து கொள்ள வேண்டும்.

அதை வாசிக்க பொறுமை இருந்தால் புத்தகம் வாசிக்கும் பொறுமையும் வரும்.

29 வயதுடன் இளைஞர் என்ற பதவி போய் விடும்.

பெண்களாக இருந்தால் 28 வயதிற்குள் திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஆண்களுக்கு 33 வரை வைத்துக் கொள்ளலாம். அப்படி நடக்கவில்லை எனில் ஊர் வாய்க்கு நாமே அவல் கொடுத்த கதை தான்.

நமக்குள்ளேயே நிறைய கேள்விகளை உருவாக்க வேண்டும். அதற்கு பதில் பிறரிடம் அல்லாது நாமே கண்டுப் பிடிக்க பழக வேண்டும்.

ரகசியம் என்று ஏதேனும் நமக்கு இருந்தால் நமக்குள்ளேயே வைத்துக் கொள்ள பழக வேண்டும்.

மன அழுத்தமோ, கஷ்டமோ, மன உளைச்சலோ என்னவாக இருந்தாலும் பிறரிடம் சொல்லி ஆறுதல் தேடக் கூடாது. நாமாக சரி செய்ய பழகிக் கொள்ள வேண்டும்.

இந்த வயதுகளில் தான் யாரையும் சார்ந்து இருக்காமல் இருக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

**Don't be emotionally attached with anyone** நமக்கு நாமே இதை சொல்லிக் கொள்ள வேண்டும்.

சிறிதளவேனும் பொதுநலத்துடன் இருக்க வேண்டும்.

உடல் நலத்தில் கவனம் தேவை. நல்ல உணவு அவசியம். 35 வயதைத் தாண்டி விட்டால் இல்லாத நோய்கள் எல்லாம் வரும். இப்போது இருந்தே நல்ல உணவு உண்டு, வருமுன் காத்துக் கொள்வது நல்லது.

# காதல் என்பது...



நம் வாழ்க்கையில் பல நிலைகளை கடந்து வந்தால் தான் வெற்றி எனும் கோட்டை எட்ட முடியும். இது இல்லறம், வேலை சூழல் என அனைத்திற்கும் பொருந்தும். முக்கியமாக இன்றைய உறவுகளுக்கு மத்தியில் மூச்சுக்கு 300 தடவை காதலிக்கிறேன் என்று சொல்லிக் கொள்கின்றனரே தவிர, காதலை வெளிப்படுத்த தவறிவிடுகிறார்கள்.

இன்று பெரும்பாலும், காதல் உணர்வுகளும், முத்தங்களும், உணர்ச்சிகளும் ஸ்மைலி, எமொஜி எனும் பொம்மையாக மாறிவிட்டன. இன்று யாரும் உணர்வுகளை முழுவதுமாக 100 சத வீதம் பரிமாறிக்கொள்வதில்லை. இதன் காரணமாக தான் பாதி வழியிலேயே பயணத்தை முடித்தும், முறித்தும் கொள்கின்றனர்.

உறவில் சில சமயம் கடினமான நிலைகளை கடந்து வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அதை நீங்கள் தான் தாண்டி வர வேண்டுமே தவிர, வழியை மாற்றிக் கொண்டு வேறு பாதையை தேடி சென்றுவிடக்கூடாது

**தொடர்பு**

நேர்மையான காதலராக, மிகவும் நல்லவராக தான் இருப்பார். ஆனால், ஏதோ ஓர் காரணத்தினால் வேறு நபர் மீது ஈர்ப்புக் கொள்ள ஆரம்பித்திருப்பார். வெறுமென நான் காதலிக்கிறேன் என கூறுவது மட்டும் போதாது. உங்களுக்கே தெரியாமல் உறவில் ஏற்படும் தொய்வு காதலை சிதைத்துவிடும். அன்பும், அக்கறையும் வார்த்தையை காட்டிலும், உணர்வில் வெளிப்படுத்துங்கள்.

**பொறாமை**

உறவைக் கொல்லும் கொடிய கருவி இந்த பொறாமை. உங்கள் நண்பர் உயரும் போதோ, உங்கள் காதலி/துணை அடுத்த நிலைக்கு செல்லும் போதோ பொறாமைப்படுகிறீர்கள் எனில், நீங்கள் அந்த உறவில் பொய்யாக நடித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று தான் அர்த்தம்.

**உடலுறவு**

மனதை காட்டிலும் உடல் ரீதியாக மட்டும் நெருக்கத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பிறத்தல். இது போன்ற தருணங்கள் உண்டாவதற்கு காரணம் காதல் வெறும் வார்த்தையாக உறவில் நீடிப்பது தான். காதலின் பற்றாக்குறை தான் இது போன்ற சூழல் அதிகரிக்க காரணியாக இருக்கிறது.

**முயற்சிகள்**

சிறிய பிரச்சினையை காரணம் காட்டி எல்லாம் முடிந்து விட்டது இனிமேல் இருவரும் சேர முடியாது என்ற எண்ணம் பிறப்பது, எப்போது நீங்கள் உங்கள் உறவில் இனி முயற்சிகள் வேலைக்கு ஆகாது என்று நினைக்கிறீர்களோ. அன்று காதலை மீட்டெடுக்க நினைத்துப் பாருங்கள் முயற்சிகள் உங்கள் முன்னே வரிசையாக வந்து நிற்கும், உறவும் சிறக்கும்.

**நிலை மாற்றம்**

இனி இவள் வேண்டாம், வேறு நபரை பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம். இன்றைய போக்கில் பெரும்பாலும் இந்த எண்ணம் எளிதாக பிறந்து விடுகிறது. உங்கள் குணாதிசயங்களை மேம்படுத்தி அல்லது மாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர உறவை அல்ல. இப்படியே சென்றால் நிலையற்ற உறவுகள் மட்டுமே உங்கள் நிலையாகி போகும்.

**விடுதலை**

காதல் என்பது அஞ்சறைப் பெட்டியைப் போன்றது. அதில் அனைத்து சுவைகளும் நிரம்பி இருக்கும். ஏதோ ஒன்று பிடிக்கவில்லை என்பதற்காக ஒட்டுமொத்தமாக அதை தூக்கி எறிவது தவறு.

சூழ்நிலைகள் என்றும் இன்பத்தை மட்டுமே தராது. துன்பம் நேரிடுகிறது என்பதற்காக தற்கொலை செய்துக் கொள்வது முட்டாள்தனமான செயல். எனவே, உறவை மீட்டெடுக்க முயற்சிக்க வேண்டுமே தவிர அதை குழித் தோண்டி புதைத்துவிட கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# இருள் நிறைந்த காலக்கட்டத்தில் நம்பிக்கையை இழக்கவேண்டாம்!

## திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்துரைப்பு



கொரோனா பெருந்தொற்று உருவாக்கியுள்ள இருள்நிறைந்த இந்தக் காலக் கட்டத்தில் நம்பிக்கையை இழக்கவேண்டாம் என உயிர்த்த ஆண்டவர் நம்மிடம் கூறுகிறார் என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்.

உயிர்ப்புப் பெருவிழா, பெருந்தொற்று ஆகிய இரு தலைப்புக்களில் தன் டுவிட்டர் செய்தியை வெளியிட்டுள்ள திருத்தந்தை பெருந்தொற்றின் இந்த இருளான மாதங்களில் வாழ்வை மீண்டும் தொடங்கவும் ஒருபோதும் நம்பிக்கையை இழக்கமலிருக்கவும் உயிர்த்த ஆண்டவர் நமக்கு விடுக்கும் அழைப்புக்குச் செவி மடுப்போம் என்ற சொற்களைப் பதிவு செய்துள்ளார்.

இயேசுவின் உயிர்ப்பு தெளிவற்ற ஓர் அடையாளமோ அல்லது உளவியல் முறைப்படி ஆறுதல் தருவதோ அல்லது ஒரு கடந்தகால நிகழ்வோ அல்ல. மாறாக, மிகவும் நம்பிக்கையிழந்த சூழல்களிலும்கூட கடவுள் நம் நம்பிக்கையாக இருக்கிறார், நம் வாழ்வின் வேதனைகளை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருப்பவர் அல்லர் அவர் எனத் திருத்தந்தை கூறினார்.

### இளையோரோடு தனது நெருக்கத்தை தெரிவித்துக் கொள்கிறார் திருத்தந்தை

இந்த பெருந்தொற்று காலத்தில் நோயால் பாதிக்கப்பட்டிருப்போர் மற்றும் இந்நோயால் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்துள்ளோர் என அனைவருக்கும் நம்பிக்கையை தருகிறார் உயிர்த்த இயேசு. இவர்களுக்கு ஆறுதலைத் தரும் இயேசு, நமக்கு மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் தங்கள் பணியில் நிலைத்திருக்க உறுதியை வழங்கட்டும். இந்தப் பெருந்தொற்று காலத்தில் ஏழைகள் தங்களுக்குத் தேவையான உதவியைப் பெறவும் ஏழை நாடுகளின் தடுப்பூசித் தேவைகளை நிறைவேற்றவும் உதவுமாறு அனைத்துலக நாடுகளிடம் நான் விண்ணப்பிக்கிறேன்.

வேலையை இழந்துள்ளோர், பொருளாதாரப் பிரச்சினைகளால் சிக்கித் தவிப்போர், போதிய சமுதாயப் பாதுகாப்பின்றி துயருறுவோர் என அனைவருக்கும் உயிர்த்த இயேசு ஆறுதலை வழங்குகிறார். அனைத்து ஏழைக் குடும்பங்களின் தேவைகளை நிறைவுசெய்ய அரசுகள் நடவடிக்கைகளை எடுக்கட்டும். இந்தப் பெருந்தொற்றால் ஏழ்மையும் மக்களின் ஏமாற்றங்களும் அதிகரித்துள்ளன. ஏழைகள் அனைவரும் தங்கள் நம்பிக்கையை மீண்டும் துவக்கவேண்டும்.

இக்காலத்தில், கல்வி நிலையங்களுக்கு செல்ல முடியாமல் வீட்டிலேயே அடைபட்டிருக்கும் மாணவர்களை நோக்கி என் எண்ணங்கள் செல்கின்றன. பிறருடன் கூடிய பழக்கங்கள் வழியே நல்ல குணநலன்கள் உருவாக உதவும் இந்தப் பருவத்தில் அடைப்பட்டு கிடக்கும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இளையோரோடு என் நெருக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### புனித வாரத்தில் தடுப்பூசிகள் திருத்தந்தையின் அழைப்பில்

கொவிட் – 19 பெருந்தொற்றுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படுவதில் ஒருவரும் ஒதுக்கப்பட்டுவிடக்கூடாது எனத் திருத்தந்தை பிரான்சிஸ் விடுத்துவரும் எண்ணற்ற விண்ணப்பங்களுக்குப் பதிலளிக்கும் விதமாகச் சமுதாயத்தில் மிகவும் நலிந்த மக்களுக்கு புனித வாரத்தில் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன என திருத்தந்தையின் தர்மப்பணி அலுவலகம் அறிவித்துள்ளது. வத்திக்கானின் கொவிட் – 19 குழு வழியாக மருத்துவமனையால் வழங்கப்பட்டு திருப்பீடத்தால் வாங்கப்பட்ட தடுப்பூசிகள் சமுதாயத்தில் மிக வறியோர் மற்றும் மிகவும் ஒதுக்கப்பட்டவர்கள் என ஆயிரத்து 200 பேருக்கு உயிர்ப்பு ஞாயிறுக்கு முன் வழங்கப்பட்டதென அந்த அலுவலகம் மேலும் அறிவித்துள்ளது. வத்திக்கானில் கடந்த ஜனவரியில் தடுப்பூசிகள் வழங்கும் பணி தொடங்கப்பட்டபோது திருத்தந்தையின் வேண்டுகோளின்பேரில் முதலில் வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தைச் சுற்றி வாழ்கின்ற ஏறத்தாழ ஐம்பது வீடற்றோர்க்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### பேதுரு வளாக மேல்மாடியிலிருந்து மீண்டும் திருத்தந்தை வாழ்த்தொலி

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனித பேதுரு வளாகத்தின் மேல்மாடியிலிருந்து ஒவ்வொரு ஞாயிறன்றும் நண்பகலில் வழங்கிவந்த வானக அரசியே வாழ்த்தொலி உரையை மீண்டும் 18 ஏப்ரல் 2021 ஞாயிறு நண்பகல் தொடர்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கொவிட் – 19 பெருந்தொற்று நெருக்கடியால் இத்தாலிய அரசு விதித்திருந்த கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு திருத்தந்தை தன் புதன் மறைக்கல்வி உரைகளையும் ஞாயிறு நண்பகல் உரைகளையும் திருத்தந்தையர் இல்லத்தின் நூலக அறையிலிருந்து வழங்கிவந்தார்.

‘கிறிஸ்தவர் ஒருவர் இறைவேண்டல் செய்யும்போது மரணமே நடுங்குகிறது, ஏனெனில் மரணத்தைவிட சக்தி மிக்கவர் ஒருவர் இறைவேண்டல் செய்பவரின் துணையாக இருக்கிறார் என்பதை அது அறியும் – அவர்தான் உயிர்த்த ஆண்டவர்’ – என்ற சொற்கள் திருத்தந்தை வெளியிட்ட டுவிட்டர் பதிவில் இடம்பெற்றிருந்தன.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

# மக்களோடு உணர்வுகளோடு செயல்படும் ஓர் அரசியல் ஊக்குவிக்கப்பட வேண்டும்

## வலியுறுத்துகின்றார் திருத்தந்தை பிரான்சிஸ்

ஓர் உண்மையான மேய்ப்பர் தன் மக்களின் உணர்வுகளோடு பங்குகொண்டு, அவர்கள் முன்னேறிச் செல்லவேண்டிய சரியான பாதையைக் காட்டுபவராக இருக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். மக்களுக்காக மட்டுமல்லாமல் அவர்களின் குழுமங்களிலும், மதிப்பீடுகளிலும் வேரூன்றப்பட்டு, அவர்களோடு செயல்படும் ஓர் அரசியல் ஊக்குவிக்கப்படுமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பன்னாட்டு மெய்நிகர் கூட்டம் ஒன்றிற்கு அனுப்பிய காணொலிச் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார்.

ஏப்ரல் 15, வியாழன் மாலையில், லண்டனில் ‘மக்களில் உறுதியாக நிலைநிறுத்தப்பட்ட ஓர் அரசியல்’ என்ற தலைப்பில் நடைபெற்ற பன்னாட்டு கூட்டத்திற்கு அனுப்பிய காணொலிச் செய்தியில் நிலம், இல்லிடம், வேலை ஆகிய மூன்று அம்சங்களை மையப்படுத்தி, தன் எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

அக்கூட்டத்தில் பங்குபெறும் பிரதிநிதிகள் எடுக்கும் தீர்மானங்கள், வறிய நிலையிலுள்ள குழுமங்கள், மாண்புள்ள ஒரு வாழ்வு வாழ்வதற்கு உதவுவதாக அமைந்திருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்ட திருத்தந்தை, தலைவர்கள், ஒரு நல்ல ஆயன் போன்று சமுதாயத்தில் மிகவும் வலுவற்றோர் மீது முதலில் அக்கறை காட்டவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

நிலம், இல்லிடம், வேலை ஆகியவற்றுக்காகப் போராடும் மக்கள், எதிர்ப்பு மற்றும் புறக்கணிப்பு போன்ற துயரங்களை எதிர்கொள்ளும்போது, அவர்களுக்குத் தோள்கொடுக்க வேண்டும் என்று, தன் செய்தியில் வலியுறுத்திய திருத்தந்தை, இக்கூட்டத்தினரின் பணியும், சான்று வாழ்வும், கொவிட்–19 பெருந்தொற்று ஆரம்பித்த காலத்திலிருந்து மிகவும் அவசரத் தேவையானதாக மாறியுள்ளது என்றும் கூறியுள்ளார்.

மக்களுக்காகச் செயல்படும் ஓர் அரசியல், மக்களின் வாழ்வில் வேரூன்றப்பட்ட, உடன்பிறந்த உணர்வு கொண்ட ஓர் அரசியலாக அமையவேண்டும் என்றும் திருத்தந்தை எடுத்துரைத்தார்.

# திருத்தந்தை பிரான்சிஸ் குறித்து ஓய்வு நிலை திருத்தந்தை கடிதம்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மெய்யியல் மற்றும் இறையியலில் ஆழமான பயிற்சி பெற்றுள்ள ஒரு மனிதர் என ஓய்வு நிலை திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் கூறியுள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இறையியல் என்ற தலைப்பில் 11 எழுத்தாளர்கள் எழுதிய 11 நூல்கள் தனக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறித்து மகிழ்கிறார் எனவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அதிகாரப் பூர்வப் போதனைகளைப் பொறுத்தவரை தனது பாப்பிறைப் பணிக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பணிக்கும் இடையே ஓர் உள்ளார்ந்த ஒற்றுமை இருப்பதாகவும் கூறியுள்ளார் ஓய்வு நிலை திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்.

இச்சிறிய நூல்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மெய்யியல் மற்றும் இறையியலில் ஆழமான பயிற்சி பெற்றுள்ள ஒரு மனிதர் என்பதைச் சரியாக விளக்குவதன் வழியாக எடுத்துரைக்கும் பாங்கு மற்றும் மனநிலையில் வேறுபாடுகள் இருந்தாலும்கூட எம் இரு பாப்பிறைப் பணிகளுக்கு இடையே, உள்ளார்ந்த தொடர்ச்சி இருப்பதைப் பார்ப்பதற்கு உதவியுள்ளன எனவும் அக்கடிதம் கூறுகிறது.

கத்தோலிக்கத் திருஅவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் ஐந்தாம் ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இறையியல் என்ற தலைப்பில் எழுதப்பட்ட நூல்களை வத்திக்கான் நூல் வெளியீட்டுக் கழகம் வெளியிட்டுள்ளது. இந்நிகழ்வை முன்னிட்டு, திருத்தந்தை 16ஆம் அவர்களின் இக்கடிதமும் வெளியிடப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், முதல் தென் அமெரிக்க, முதல் இயேசு சபை, மற்றும், அசிசி நகர் புனித பிரான்ஸிஸின் பெயரை முதலில் ஏற்ற திருத்தந்தையாக இருக்கின்றார்.

# உரோமில் வத்திக்கானுக்கு அருகில் உள்ள ஆலயம் இறை இரக்க ஆன்மீக மையமாகச் செயல்படுகிறது

போலந்து நாட்டு அருள்சகோதரி புனித மரிய பவுஸ்தீனா கோவால்ஸ்கா அவர்கள் (1905 – 1938) ஓர் இறைக்காட்சியாளர். இறை இரக்க இயேசுவை இவர் காட்சிகளில் கண்டு அவற்றில் இயேசு அவருக்கு கூறியவற்றை வெளிப்படுத்தியதன் பயனாக இன்று உலகெங்கும் இறை இரக்கப் பக்தி பரவியுள்ளது. போலந்து நாட்டு அருள்சகோதரி புனித மரிய பவுஸ்தீனா கோவால்ஸ்கா அவர்கள் இறை இரக்கத்தின் தூதர் என்று அழைக்கப்படுகிறார். திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்கள் அருள்சகோதரி பவுஸ்தீனா அவர்களை புனிதராக அறிவித்து திருஅவையில் உயிர்ப்பு ஞாயிறுக்கு அடுத்துவரும் ஞாயிறு தினத்தை இறைஇரக்க ஞாயிறாகச் சிறப்பிக்கப்படுமாறும் அறிவித்தார். உரோம் மாநகரில் வத்திக்கானுக்கு அருகில் அமைந்துள்ள ஆலயம் இறை இரக்க ஆன்மீக மையமாகச் செயல்பட்டுவருகிறது. இந்த ஆலயத்தில் 11 ஏப்ரல் 2021 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறை இரக்க ஞாயிறு திருப்பலியை நிறைவேற்றி இறைஇரக்கத்தின் வல்லமையை அறிவித்தார்.

இறைஇரக்கத்தின் தூதர் ஏழைகளின் தோழர் என அழைக்கப்படும் இயேசு சபை இறை ஊழியர் லூயி மரி லெவே அவர்கள் ‘ஓ இயேசுவே! அன்பின் அரசரே! உமது அளவில்லா இரக்கத்தில் நம்பிக்கை வைக்கிறேன்’ எனச் செபிக்கக் கற்றுக்கொடுத்தவர். 1884 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் பிறந்த இவர் சிவகங்கை மறைமாவட்டத்தில் 52 ஆண்டுகள் உட்பட இந்தியாவில் 65 ஆண்டுகள் மறைப்பணியாற்றி 1973ஆம் ஆண்டில் இறைபதம் சேர்ந்தார். இறை இரக்க பக்தியை உலகெங்கும் பரப்பியிருப்பவர்களில் அவரின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 077 477 9443, 076 141 9299

## காணி தேவை

யாழ் நகரில் இருந்து மருதனார் மடத்திற்கு இடைப்பட்டதாக K.K.S. வீதியில் வீதியோரத்தை அண்மித்ததாக காணி தேவை.
தொடர்புகளுக்கு - 077 951 4699

## மணமகள் தேவை

பி.தி - 23.01.1989, இந்து V, நட் - அத்தம், பாவம் - 9 1/4, கல்வி - HNDA பட்டதாரி, தொழில் - U.K PR, எதிர்பார்ப்பு - படித்த அழகான, U.K வர விரும்பும் பெண் தேவை.
தொடர்புகளுக்கு -077 857 8528

பி.தி - 06.08.1993, இந்து V, நட் - உத்திரம் 4, பாவம் - 16 1/2, செவ் - 1 இல், சூ/செவ் - 1 இல், கல்வி - AL, தொழில் - சுவிஸ் PR, எதிர்பார்ப்பு - சுவிஸில் PR இல்லாத சூ/செவ் 1,7,8 இல் உள்ள படித்த பெண் தேவை.
தொடர்புகளுக்கு -077 857 8528

பி.தி - 24.09.1989, இந்து V, நட் - புனர் பூசம், பாவம் - 18, சூ/செவ் - 12 இல், கல்வி - Chatted Accountant, தொழில் - Accoutant Company, எதிர்பார்ப்பு - Australia பெண் தேவை.
தொடர்புகளுக்கு -077 197 1667

லண்டனில் வாழும் 37 வயது செவ் வாய் குற்றமற்ற வெள்ளாளர் குல மண மகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு -0014166661855 0212221515 0776505097

## மணமகன் தேவை

பி.தி - 08.10.1984, இந்து V, நட் - பூரட்டாதி 4, பாவம் - 62, செவ் - 2 இல், கல்வி - Bisness Management, தொழில் - Accoutant, எதிர்பார்ப்பு - Australia பட்டதாரி மணமகன் யாழ் அரச சேவை.

பி.தி - 20.8.1996, இந்து V, நட் - பூராடம் 1, பாவம் - 20, செவ் - 10 இல், கல்வி - M.B.B.S, தொழில் - Doctor, எதிர்பார்ப்பு - Doctor, Engineer (Australia, Canada U.S) மணமகன் தேவை.

பி.தி - 09.08.1984, இந்து குருகுலம், நட் - உத்தராடம் 2, பாவம் - 53, செவ் - 08 இல், கல்வி - Dentel Doctor, தொழில் - Dentel Doctor UK PR, எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு -077 197 1667

கனடாவில் வாழும் 26 வயது 7 இல் செவ்வாயுள்ள குருகுல மணமகளுக்கு படித்த (It & Software) மணமகனையும் (வெள்ளாளர், கோவியர், விஸ்வகுலத்தோரும் விரும்பத்தக்கது) இலங்கையில் தேடுகிறோம்
தொடர்புகளுக்கு -0014166661855 0212221515/ 0776505097

## கல்வி

மிருதங்கம், வயலின், கிட்டார், ஓகன், வாய்ப்பாட்டு கற்க விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு - 077 022 9400

சகல வகையான இசை வகுப்புகளும் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு - 021 222 4242 077 556 3030

## பழுது பார்த்து கொடுக்கப்படும்

சகல வகையான குளிர்சாதனப் பெட்டிகளும் பழுது பார்த்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 654 8613

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர், பராமரிப்பாளர் தேவை.
தொடர்புகளுக்கு:- 076 740 3814

கணினி திருத்துவதற்கும் வேலை பழக விரும்பும் ஆண், பெண், இரு பாலாரும் தேவை.
தொடர்புகளுக்கு:- 077 914 7472

தினசரி பத்திரிகைகள் வீடுகளுக்கு விநியோகிக்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 292 6316

சி.சி.ரீ.வி. கமரா பொருத்துதல், பராமரித்தல் மற்றும் முதற்தர கமராக்களை வாங்குவதற்கு அணுகவும்.
தொடர்புகளுக்கு - 077 473 6057

சுன்னாகத்தில் இயங்கும் உணவகத்திற்கு சமையல் தெரிந்தோர், உதவியாளர், சுத்திகரிப்பாளர் தேவை.
தொடர்புகளுக்கு - 077 652 9583

## மரக் கன்றுகள் விற்பனைக்கு

11/2 மாத மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு - 021 492 7778

தரமான இஞ்சி கன்றுகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 021 492 7778

## வீடு வாடகைக்கு தேவை

பருத்தித்துறை வீதியில் 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு. யாழ். நகருக்கு அண்மையில், வாகன தரப்பிட வசதி உண்டு. அலுவலகங்களுக்கு உகந்தது.
தொடர்புகளுக்கு - 076 361 4997

## குத்தகைக்கு

திருகோணமலை பிரதான வீதியில் 1.5 பரப்பு காணி குத்தகைக்கு உள்ளது.

நல்லூர் கோவில் வீதியின் முகப்பாக 3.5 பரப்பு காணி குத்தகைக்கு உள்ளது விலை பேசி தீர்மானிக்க முடியும்.
தொடர்புகளுக்கு - 076 361 4997

பண்ணை ஒன்று ஆரம்பித்து நடத்த அல்லது உளுந்து சாடுபடி செய்ய மட்டுவிலில் தோட்டக்காணி குத்தகைக்கு காணிகள் 60 பரப்பு, 40 பரப்பு.
தொடர்புகளுக்கு - 076 361 4997

## வீடு, காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு இராசபாத வீதியில் பிரதான வீதியில் 10 பரப்பு காணி.

யாழ் பிறவுன்வீதியில் கல்வயல் தேவாலயம் அருகில் 5 பரப்பு காணி

கொக்குவில் பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பலப்பு காணி வெட்டுக்கிணறு.

சாவகச்சேரியில் வைத்தியசாலைக்கு அண்மையில் 12 1/2 ஏக்கர் காணி.

வியாபாரி மூலையில் 500 மீ உள்ளே மாடி வீட்டுடன் 4 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 077 857 8528

ஆலயங்கள் சாஸ்திர முறைப்படி அமைக்க, பழைய ஆலயங்கள் புனரமைக்க, இந்தி சிற்பாச்சாரிகள் மூலமாக பொம்மைகள் திருப்பாவை, வேலைகள் நிர்மாணித்து தரப்படும்.

பருத்தித்துறை வியாபார மூலையில் காணியும் நல்ல நிலையிலுள்ள மாடி வீடும் விற்பனைக்கு உண்டு.

முள்ளியவளை குமுழமுனையில் 2 ஏக்கர் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

வவுனியா கோயில் குளம் பகுதியில் 11/2 பரப்பு காணியும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு.

அச்சுவேலி மேற்கு முட்டியபுலம் வசாவிளானில் உள்ள 86 பரப்பு தோட்டக்காணி (நல்லசிவந்த மண்) விற்பனைக்கு உண்டு.

மந்திகை வைத்தியசாலையின் பிரதான வீதியில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் 6 பரப்பு காணி உண்டு.

இயக்கச்சியில் A9 வீதியிலிருந்து வெற்றிலைக் கேணிக்கு பிரதான வீதியில் 3 பக்க பாதையுடன் 10 ஏக்கர் காணி உண்டு.

**தொடர்புகளுக்கு - 077 857 8528**

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் 11/2 பரப்பு காணி விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு - 077 432 2836

வெள்ளவத்தையில் கடற்பரை ஓரமாக 6.2 பேர்ச் காணி விற்பனைக்கு, மூன்று அடி பாதை மட்டும் ஒரு பேர்ச் 40 லட்சம்.

தெகிவளையில் அடுக்கு மாடி குடியிருப்பில் 1,350 sq ft கொண்ட வீடு விற்பனைக்கு 3 படுக்கை அறையும், 2 குளியல் அறையும் வாகன தரிப்பிட வசதியும் கொண்டது. 250 லட்சம்.

தெகிவளையில் கடற்பரைக்கு அண்மையாக 10 பேர்ச் வீடு விற்பனைக்கு உண்டு. 55 லட்சம்.

தெல்லிப்பளையில் 2 1/2 பரப்பு காணி 3 ஆவது பிளாக் மெயின் வீதியில் விற்பனைக்கு உண்டு. 18 லட்சம்.

13/4 பரப்பு காணி கண்டி வீதி A9 மாம்பழம் சந்திக்கு 200 மீற்றர் தூரத்தில் அகலமான வீதிக்கு முகப்பாக விற்பனைக்கு மொத்தமாக 59 லட்சம்.

பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஆடியபாதம் வீதிக்கு 50 மீற்றர் தொலைவில் 3 பரப்பு காணி விற்பனைக்கு இரண்டாக பிரிக்க கூடியது. ஒரு பரப்பு 100 லட்சம்.

A9 வீதிக்கு அண்மையாக 10.5 பரப்பு காணி விற்பனைக்கு ஒரு பரப்பு 10 லட்சம் (மொத்தமாக 100 லட்சம்.)

1 பரப்பு 3 குழி புத்தம் புதிய வீடு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து 1.5 கிலோ மீற்றர் தூரத்தில் கொக்குவில் பகுதியில் விற்பனைக்கு 3 அறைகளுடன் சுற்று மதிலுடன் கூடிய வீடு. 145 லட்சம்.

கொக்குவில் ஆடியபாதம் வீதியிலிருந்து 50 மீற்றல் தொலைவில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு ஒரு பரப்பு 85 லட்சம்.

தனங்கிளப்பில் 12 ஏக்கர் மேட்டுக் காணி விற்பனைக்கு பிரதான வீதிக்கு இரண்டாம் காணி ஒரு ஏக்கர் 12 லட்சம்.

ஈச்ச மோட்டையில் பழைய வீட்டுடன் 4 பரப்பு காணி விற்பனைக்கு, இரண்டாக பிரிக்கலாம் மொத்தமாக 140 லட்சம்.

ஆவரங்காலில் தென்னை வைக்கக் கூடிய 28 பரப்பு வயற்காணி விற்பனைக்கு ஒரு பரப்பு 1 லட்சம்.

தாவடியில் 1 1/4 பரப்பு புத்தம் புதிய வீடு விற்பனைக்கு 3 அறைகள் இணைந்த குளியல் அறை குழாய் கிணறு நல்ல தண்ணீர் சுற்று மதில் சில வேலைகள் மீதமுள்ளது. கே.கே.எஸ் வீதிக்கு 600 மீற்றர் தொலைவில் 100 லட்சம்.

**தொடர்புகளுக்கு 076 361 4997**

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 16 பரப்பு காணியும் பருத்தித்துறை பிரதான வீதியில் 40 மீற்றர் நடை தூரத்தில் காணியும் உள்ளது.

யாழ். பாடி வீதியில் சகல வசதிகளுடன் வீட்டுடன் 2 1/4 பரப்பு காணி உள்ளது. (முக்கியமான இடங்கள் அருகாமை)

இருபாலை கிழக்கில் 4 3/4 பரப்பு காணி உண்டு.

கே.கே.எஸ் வீதி சுன்னாகம் சந்திக்கு அருகாமையில் 6 பரப்பு காணி உண்டு.

பளையில் தென்னந்தோப்புடன், வீடு, நீர்ப்பாசனம் மின்சார வசதிகளுடன் கூடிய 40 ஏக்கர் காணி உண்டு.
**தொடர்புகளுக்கு - 077 857 8528**

## சேவைகள்

பெண்களுக்கான திருமண வைபவ சாறி பிளவுஸ்களுக்கு ஆரிவேர்க் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 077 332 1937, 076 610 9770

பழைய நகைகள் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும், தகுந்த ஆவணங்களுடன் வருகை தரவும்.
தொடர்புகளுக்கு:- 076 804 6048
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி

Laptop உதிரிப்பாகங்களை பெற்றுகொள்ளலாம் பாவித்த Laptop வாங்கப்படும், விற்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 914 7472

அனைத்து விதமான இசைக்கருவிகளையும் மிகக்குறைந்த விலையில் வாங்க மற்றும் பழுது பார்க்க.
தொடர்புகளுக்கு - 077 556 3030

## சொத்துக்கள் வாங்க விற்க

✔ கடை ✔ கட்டிடங்கள்
✔ வயல் ✔ தோட்டம்
✔ வீடு ✔ காணி
✔ தென்னந்தோட்டம்

விற்க.. வாங்க...
வாடகைக்கு... குத்தகைக்கு...

www.dreamhouse.lk

## தேவை

புதிதாக திறக்கப்படவுள்ள அசைவ உணவகத்துக்கு றைஸ், கொத்து மற்றும் உணவுகள் செய்யத் தெரிந்த முன் அனுபவமுள்ளவர்கள் தேவை.
**தொடர்பு:-0761239502**

## பொலிஸாரின் விசேட சோதனைகளில் அம்பாறையில் 75 பேர் மீது நடவடிக்கை

அம்பாறை பிராந்தியத்தில் நேற்று காலை முதல் மதியம் வரை விசேட போக்குவரத்து பொலிஸாரின் திடீர் சோதனை நடவடிக்கை ஆரம்பமாகியது.

இந்த சோதனை நடவடிக்கை சம்மாந்துறை புறநகரப்பகுதி, கல்முனை நகரப்பகுதி, நற்பிட்டிமுனை பிரதான சந்தி, தாளவட்டுவான் சந்தி, பாண்டிருப்பு, சவளக்கடை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, குடிபோதையில் வாகனம் ஓட்டுவது தொடர்பில் கண்காணிக்கப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வீதி ஒழுங்குமுறை தொடர்பான அலோசனைகளும் பொலிஸாரால் வழங்கப்பட்டன.

இந்தச் சோதனை நடவடிக்கை அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வழிகாட்டலில், அம்பாறை மாவட்ட விசேட போக்குவரத்துப் பொலிஸாருடன் இணைந்து கல்முனை சம்மாந்துறை சவளைக்கடை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸாரும் இணைந்து முக்கிய சந்திகள் பிரதான வீதிகளில் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது 75 பேரிடம் குற்றங்களுக்காக தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளுக்கு சொந்தமான சொத்துக்கள் பறிமுதல்

## சரத் வீரசேகர தெரிவிப்பு



தடைசெய்யப்பட்ட 11 இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளுக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களையும் அரசாங்கம் பறிமுதல் செய்யும் எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (சனிக்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், அந்த அமைப்புகளின் தலைவர்களிடமிருந்து தகவல் பெறப்பட்டது எனவும் கூறினார்.

பறிமுதல் செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க அவர்களின் சொத்து மற்றும் வங்கி கணக்குகள் தொடர்பான ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் தலைவர்கள் தொடர்பாகவும் விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இந்த வாரம் அல்கொய்தா, ஐ.எஸ். உள்ளிட்ட 11 இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளுக்கு தடை விதித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஞானசாரருக்கு எதிராக விரைவில் குற்றவியல் வழக்குத் தாக்கலாகும்?

ஸ்ரீலங்காவில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் வழக்குத்தாக்கல்செய்யுமாறு அரசாங்கத்திடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, விரைவில் ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தென்னிலங்கையில் செயற்பட்டு வருகின்ற கடும்போக்குவாத பௌத்த அமைப்புக்களில் ஞானசார தேரர் தலைமையிலான பொதுபல சேனா அமைப்பு முன்னிலை வகித்து வருகின்றது. முஸ்லிம் மக்களுக்கு விரோதமான அமைப்பாகவே இது கருதப்படுகின்றது.

குறிப்பாக, இனவாத செயற்பாடுகள், பேச்சுக்கள், மஹரகம மற்றும் அழுத்கம பகுதிகளில் ஏற்படுத்திய கலவர நிலைமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் ஞானசார தேரருக்கு எதிராகக் காணப்படுகின்றன. மேலும் ஈஸ்டர் தாக்குதல் பற்றிய விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில், பொதுபல சேனா அமைப்பு இனவாத செயற்பாட்டுக்கு ஊக்கமளித்து வருவதால் அதனைத் தடை செய்ய வேண்டும் என்கின்ற பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

சிவில் மற்றும் அரசியல் உரிமை பற்றிய சர்வதேச பிரகடனத்திற்கமைவாக, ஞானசார தேரருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான பரிந்துரையை ஏற்கனவே ஜனாதிபதி ஆணைக்குழு முன்வைத்திருந்தது. இதன் காரணமாக தென்னிலங்கையில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளதோடு, எந்த வகையிலும் அந்த அமைப்பின் மீது தடையை அரசாங்கம் பிரயோகிக்காது என்பதை அரச தரப்பு அமைச்சர்களும் பொது மேடைகளில் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், ஈஸ்டர் தாக்குதல் பற்றி விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழு ஒப்படைத்த அறிக்கையை மீளாய்வு செய்து பரிந்துரைப்பதற்காக அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவால் அமைக்கப்பட்ட துணை அமைச்சரவைக் குழுவே வழக்குத் தாக்கல் செய்வதற்கான இந்தப் பரிந்துரையை முன்வைத்திருக்கின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

## ‘வாழ்க்கைக்கான தோட்டம்’ தேசிய வேலைத்திட்டம் நேற்று மன்னார் முருங்கன் கமநல சேவைகள் நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது





ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம், ஏப்.17

முருங்கை மரத்தின் மருத்துவ மதிப்பு மற்றும் பொருளாதாரப் பெறுமதியை மக்களிடம் பிரபல்யபடுத்துவதற்கான ‘வாழ்க்கைக்கான தோட்டம்’ தேசிய வேலைத் திட்டத்தின் மாவட்ட மட்ட ஆரம்ப நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அன்ராணி மெரின் குமார் தலைமையில் இடம் பெற்றது.

குறித்த தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் அபிவிருத்திக் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப் பினருமான காதர் மஸ்தான், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. ஸ்ரன்லி டி மேல், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் திருச் செல்வம் பரஞ்ஜோதி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் சுமார் 13 ஆயிரம் முருங்கை மரக் கன்றுகளை இலவசமாக வழுங்கும் குறித்த நிகழ்வில் 400 முருங்கை மரக் கன்றுகள் முருங்கன் கமநல பிரிவு பகுதி மக்களுக்கு வழுங்கி வைக்கப்பட்டது. இதன் போது கர்ப்பிணித்தாய்மார்களுக்கு வைபவரீதியாக வழுங்கி வைக்கப்பட்டது.

முருங்கை மரத்தின் மருத்துவ மதிப்பு மற்றும் பொருளாதாரப் பெறுமதியை மக்களிடம் பிரபல்யபடுத்துவதற்கான ‘வாழ்க்கைக்கான தோட்டம்’ என்னும் தேசிய வேலைத் திட்டத்திற்காக புது வருடத்தில் தலையில் எண்ணெய் பூசும் சுபநேரத்தில் வைபவ ரீதியாக குறித்த தேசிய வேலைத்திட்டம் தொடக்கி வைக்கப்பட்டது.

விவசாய அமைச்சு , விவசாய கமநல அபிவிருத்தி திணைக்களம் , கல்வி அமைச்சு ஆகியவை இணைந்து குறித்த திட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களாக செயல்படுவதுடன் குறித்த திட்டம் விவசாய அமைச்சர் சசிந்திர ராஜபக்ஷ அவர்களினால் முன்னெடுக்கப்படுகின்றது.

விகாரை மற்றும் மத ஸ்தலங்களில் இலவசமாக முருங்கை மரக்கன்றுகள் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நீராவிப்பிட்டியில் கத்திக்குத்து

### ஒருவர் படுகாயம்

முல்லைத்தீவு - நீராவிப்பிட்டி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

குடும்பத்தகராறு காரணமாகவே கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் நீராவிப்பிட்டி பகுதியை சேர்ந்த 39 வயதுடைய முகமட் றஜாஜ் என்பவரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்கவே வடக்கில் கோட்டா அரசால் திட்டமிட்ட கைதுகள்

## சார்ள்ஸ் எம்.பி. காட்டம்



சிங்கள மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்கவே வடக்கில் பயங்கரவாதத்தடுப்புப் பிரிவினரால் கைதுகள் இடம்பெற்று வருகின்றன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

யாழில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற கைது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் –

தற்போதைய கோட்டாபய அரசாங்கம் சிங்கள மக்களின் பெரும்பான்மையான ஆதரவோடு ஆட்சிப் பீடம் ஏறிய போதிலும் தற்போது சிங்கள மக்களின் கடும் எதிர்ப்புக்கு உள்ளாகிய நிலை காணப்படுகின்றது. சிங்கள மக்கள் அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாட்டில் ஈடுபட்டு உள்ளார்கள். பௌத்த துறவிகளும் சிங்கள மக்களும் அரசுக்கு எதிராக முழுமையான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள்.

குறிப்பாக ஆட்சிக்கு வரும்போது இந்த அரசாங்கம் நாட்டுக்கு நன்மை புரியும் – நீதியை நிலைநாட்டும் – நேர்மையான அரசாக இருக்கும் என்று நம்பியே இந்த அரசுக்குப்பூரணஆதரவுவழங்கிஆட்சிப்பீடம்ஏற்றினார்கள். எனினும் தற்போதைய அரசாங்கம் இலங்கையின் முக்கிய ஸ்தானங்களை வெளிநாடுகளுக்கு தாரை வார்க்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதன் காரணமாக சிங்கள மக்கள் மற்றும் பௌத்த துறவிகள் தமது எதிர்ப்பை அரசாங்கத்துக்கு எதிராக வெளியிட்டு வருகிறார்கள்.

வடக்கு கிழக்குப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளை மீள உருவாக்க எத்தனிக்கின்றார்கள் எனக் காரணங்காட்டி இளைஞர், யுவதிகளைக் கைது செய்து சிங்கள மக்களின் எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு வடக்கில் பல்வேறுபட்ட கைது நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

வடக்கு கிழக்கில் புலிகளை மீள உருவாக்குகிறார்கள் ஆனால் கோட்டாபய அரசினால் மாத்திரமே இந்த விடுதலைப்புலிகள் உருவாக்கத்தை கட்டுப்படுத்த முடியும் என்ற செய்தியினை தென்னிலங்கை மக்களுக்கு தெரிவித்து தென்னிலங்கை மக்களுக்கு கோட்டாபய மீது நம்பிக்கையை ஏற்படுத்தி அரசாங்கத்தின் மீது உள்ள எதிர்ப்பு உணர்ச்சியை இல்லாமல் செய்வதற்காகவே இந்த வலுக்கட்டாயமான செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

இதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். இவ்வாறான ஒரு சம்பவம்தான் நேற்று வடக்கு மாகாணத்தில் 4 இற்கும் மேற்பட்டோர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். இந்த செய்தி தென்னிலங்கை மக்களை சமாளிப்பதற்காக அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படும் ஒரு காரியம் என நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.

# சட்டம் ஒரு....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### சட்டத்துக்கு கட்டுப்படாவிட்டால் என்னவாகும்?

மனிதர்கள் சட்டத்துக்குக் கட்டுப்படாவிட்டால் இந்த உலகத்தில் எதுவுமே நடக்காமல் அனைத்துமே ஸ்தம்பிதம் அடையும். உலகமே அடுத்த அடியை வைக்க முடியாத அளவுக்குச் சென்று விடும்.அனைவரும் சட்டத்துக்குக் கீழ்ப்படிந்தேயாக வேண்டும். சட்டத்துக்குக் கீழ்ப்படியாமல் இருந்தால் தண்டனையில் இருந்து தப்ப முடியாது. சட்டத்துக்குக் கீழ்ப்படிதலை மக்கள் தமது பழக்கமாக உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

### சட்டத்தின் நோக்கம்

சமூகத்தை ஒழுங்குபடுத்தி இவ்வாறான ஒழுங்குபடுத்தல் மூலம் ஒரு சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் நன்மதிப்பையும், சமத்துவத்தையும் அடைவதை உறுதிசெய்வதற்கு உதவுவதே சட்டம் என்ற திட்டத்தின் நோக்கமாகும்.

சட்டங்கள் இன்றி மனித வாழ்க்கையைச் சிறந்த முறையில் நடத்த முடியுமா? மனித வாழ்க்கையைச் சிறந்த முறையில் நடத்த முடியும். ஆனால், அதற்கு சில அடிப்படை விடயங்களைப் பூர்த்திசெய்ய வேண்டியுள்ளன. அதாவது நிர்வாக எல்லைக்குள் எந்தவொரு வேற்றுமைகளும் இருக்கக்கூடாது. எந்தவோர் ஏற்றத்தாழ்வும் இருக்கக்கூடாது. அனைவரது தேவையும் சமமாகவே பூர்த்தி செய்யப்பட வேண்டும். இவ்வாறு எந்தவொரு பிரச்சினைகளும் அற்ற ஒரு சமூகம் எப்போது உருவாகின்றதோ அன்று சட்டத்தின் தேவையும் இவ்வுலகில் இருக்காது.

எளிமையாகக் கூறுவோமாயின் பிரச்சினைகள் இருந்தால் தானே காவல்நிலையங்கள் தேவை. காவல் நிலையங்களை உருவாக்கத்தானே சட்டங்கள் தேவை. பிரச்சினைகளே இல்லாவிடில் சட்டங்களின் தேவையே இருந்துவிடாது.

ஆனால், இங்கு நடைமுறைச் சாத்தியமற்ற விடயம் என்னவென்றால், இவ்வாறு வேற்றுமைகள் அற்ற – ஏற்றத் தாழ்வற்ற – குழப்பங்கள் அற்ற ஒரு சமூகத்தை உருவாக்க முடியுமா என்ற வினாவே. நிச்சயமாக பல்வகை கலாசார சமூகத்தில் பிறந்த மனிதர்களாகிய நம்மிடம் எண்ணங்களும் செயற்பாடுகளும் வேறுபாடுகள் கொண்டவையாகவே காணப்படும். ஒவ்வொருவரும் தாம் வாழும் சூழல், மரபணுக்கு ஏற்ப பலவிதமான நடத்தைகள், செயற்பாடுகளுடன் காணப்படுவார்கள். இவை அனைத்தையும் ஒரே குடைக்குள் கொண்டு வருவதென்பது இரவிலே தோன்றும் சூரியன்தான்.

சட்டத்தின் சிறந்த விளைவைப் பெற முதலில் ஒவ்வொரு குடிமகனும் சட்டம் எமது நலனுக்காகவே உருவாக்கப்பட்டது என்பதில் தெளிவுபெற வேண்டும்.

அவ்வாறு பெறும் தெளிவானது சரியான பாதைக்கு இட்டுச் செல்லக் கூடியதாக இருக்க வேண்டும்.

சட்டங்களைப் பின்பற்றாமல் இருப்பதும் தவறு; பின்பற்றுபவர்களுக்கு இடையூறு செய்வதும் தவறு.

பிரஜைகள் சமூக, அரசியல் பொறுப்புணர்வு கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் நேர்மை, புத்திசாலித்தனம், கல்வி வளர்ச்சி கொண்டவர்களாக இருக்க வேண்டும். இப்பிரஜைகள் உணர்வுபூர்வமாகச் சட்டத்துக்கு எவ்வாறு கீழ்ப்படிந்து நடப்பது என்பதையும், சமாதானம், சமூக முன்னேற்றம் என்பவற்றுக்குச் சட்டத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்ற நெறிமுறை உணர்வு தெரிந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

சட்டத்துக்குக் கீழ்ப்படிதலை ஒரு பழக்கமாக அல்லாமல் தமது கொள்கையாகக் கடைப்பிடிக்க வேண்டும. லஸ்கியின் வார்த்தைகளாகிய, நலன்புரி சமூகம் ஒன்றுக்காகச் சட்டத்துக்குக் கீழ்ப்படிதல் அவசியமானதாகும். சட்டங்கள் கீழ்ப்படிதலை மட்டும் வலியுறுத்துபவையாக இருக்கக்கூடாது. அரசின் பௌதீகப் பலத்தாலும், ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரத்தாலும் சட்டங்கள் உருவாக்கப்படுபவைகளாக இருக்க வேண்டும் என்பது கவனத்தில்கொள்ளத்தக்கது என்பதை நினைவுபடுத்துவோம்.

# விமல் அணிக்கு எதிராக விரைவில் நடவடிக்கை

## பொதுஜன முன்னணி அதிரடி

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள் அரசாங்கத்தை விமர்சிக்கும் அமைச்சர்கள், உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கட்சியின் தலைமை தீர்மானித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தப் பட்டியலில் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார மற்றும் விஜேதாஸ எம்.பியும் உள்ளடங்கியுள்ளனர் என நெலும்மாவத்தை தகவல்கள் கூறுகின்றன. இதேவேளை இதற்கான அனுமதியை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வழங்கும்வரை மொட்டுக் கட்சி யின் தலைமை காத்திருக்கின்றனர் எனவும் கூறப்படுகின்றது.




லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 197 1667
077 316 4796

மணமகன் விவரம்

பிறந்த திகதி – 1982.06.05 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – அனுசம்
கி.பா – 32 செவ் – 11 இல்
தகைமை – B.B.A. Jaffna Campus
தொழில் – Accountant அரச சேவை
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1987.08.24 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – ஆயிலியம் 4
கி.பா – 66 சூரி/செவ் – 1 இல்
தகைமை – Accountant தொழில் – Austriliya PR
எதிர்பார்ப்பு – Australia பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி –1985.08.02 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – அவிட்டம் 4
கி.பா – 55 செவ்/சூரி – 7 இல்
தகைமை – B.A.
தொழில் – Management Assistant
எதிர்பார்ப்பு – வடமராட்சி மணமகள் தேவை. (அரச சேவை)

பிறந்த திகதி – 1991.05.06 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – திருகோணம்
கி.பா – 23 செவ் – 12 இல்
தகைமை – Low தொழில் – அரச உயர் பதவி
எதிர்பார்ப்பு – அரச சேவை பட்டத்தாரி மணமகள்.

பிறந்த திகதி – 1988.11.25 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – மிருகசீரிடம் 2
கி.பா –53 செவ் – 02 இல்
தகைமை – Electronic Eng UK
தொழில் – சொந்த நிறுவன உரிமையாளர்
எதிர்பார்ப்பு – AL படித்த மணமகள்.

பிறந்த திகதி – 1979..10.02 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – அவிட்டம் 2
கி.பா – 104 செவ் – 06 இல்
தகைமை – B.com பட்டதாரி தொழில் – அரச சேவை
எதிர்பார்ப்பு – பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1976.09.21 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 38 செவ் – 09 இல்
தகைமை – B.sc தொழில் – கணித ஆசிரியர்
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை மணமகள்.

பிறந்த திகதி – 1987.06.11 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – கேட்டை
கி.பா – 21 செவ் – 09 இல்
தகைமை – B.sc தொழில் – பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை மணமகள் தேவை.

மணமகள் விவரம்

பிறந்த திகதி – 19991.06.18 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூரம்
கி.பா – 73 செவ் – 08 இல்
தகைமை – B.sc Software Eng தொழில் – Company Colombo
எதிர்பார்ப்பு – பட்டதாரி கொழும்பு வேலை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1989.09.30 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – அத்தம்
கி.பா – 24 சூரி/செவ் – 2 இல்
தகைமை – AL தொழில் – UK PR
எதிர்பார்ப்பு – UK யில் PR உள்ள Student Visa PR, இல்லாதவர் தொடர்பு கொள்ளலாம்.

பிறந்த திகதி – 1982.04.09 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – சித்திரை 4
கி.பா – 16 செவ் – 4இல்
தகைமை – B.A
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – அரச சேவை பட்டதாரி மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1994.04.03 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூராடம் 1
கி.பா – 12 செவ்/சூரி – 03 இல்
தகைமை – B.sc Software Eng தொழில் – Company Colombo
எதிர்பார்ப்பு – B.sc M.sc பட்டதாரி உள்நாடு, சிங்கப்பூர் மணமகன்.

பிறந்த திகதி – 1996.07.29 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூராடம்
கி.பா – 18 செவ் – 09 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor, Eng Australia , U.S.A. PR பட்டதாரி மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1993.09.08 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – ரோகினி
கி.பா – 34 செவ் – 09 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor, Eng மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1988.12.20 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – கார்த்திகை
கி.பா – 15 செவ்/சூரி – 11 இல்
தகைமை – B.A தொழில் – UK PR
எதிர்பார்ப்பு – UK மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1995.08.10 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – திருகோணம்
கி.பா – 20 செவ்– 11 இல்
தகைமை – Electrical Eng தொழில் – Company
எதிர்பார்ப்பு – Australia , Singpore இலங்கை பட்டதாரி மணமகன்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி
021 222 3000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org